தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 314 பிலவ வருடம், ஆவணி மாதம் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை (27.08.2021) ஹிஜ்ரி - 1443, முஹர்ரம் பிறை - 17, 0115886187 - பக்கங்கள் 08

விலை ரூ.30

நக்கல் நமசிவாயம்

வைத்தியசாலைகளில் இடநெருக்கடி!

ஒட்சிசனுக்கும் தட்டுப்பாடு

•யோ.தர்மராஜ்

கொழும்பு உள்ளிட்ட நாட்டிலுள்ள முக்கிய வைத்தியசாலைகள் அனைத்தும் கொரோனா நோயாளர்களால் நிரம்பி வழிகின்றதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நோயாளர்களில் பெரும்பாலானோருக்கு ஒட்சிசன் தேவை ஏற்பட்டுள்ளதாக வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

கொரோனா நோயாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட வார்ட்களுக்கப்பால் மேலும் சில வார்ட்களை நிர்மாணிப்பதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்தோடு, வைத்தியர்கள், தாதியர்கள் உள்ளிட்ட வைத்தியசாலை சுகாதாரப் பிரிவினர் அதிகமானோர் கொரோனா தொற்றுக்குள்ளாகி சிகிச்சைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் 700 நோயாளர்களும் தொற்று நோயியல்... 02≫

6 மாத பச்சிளம் குழந்தை கொரோனாவுக்கு பலி

வவுனியாவில் 6 மாத கைக்குழந்தை ஒன்று கொரோனா தொற்றுக்குள்ளான நிலையில் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

குறித்த குழந்தைக்கு சுகயீனம் ஏற்பட்ட நிலையில், வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொவிட் தொற்றிருப்பது உறுதி செய்யப்பட்டது.

ஒட்சிசன் பதுக்கிவைப்பே பற்றாக்குறைக்கு காரணம்!

லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவிப்பு

•யோ.தர்மராஜ்

கொரோனா தொற்றிலிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள சிலர் வீட்டில் ஒட்சிசன் சிலிண்டர்களை சேமித்துவைக்க ஆரம்பித்துள்ளமை, ஒட்சிசன் பற்றாக்குறைக்கு காரணமாகியுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

மக்கள் தங்கள் வீடுகளில் ஒட்சிசன் சிலிண்டர்களை விருப்பப்படி சேமித்து வைப்பது தவறு என லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஜி.விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

வைத்தியர்களின் ஆலோசனை இல்லாது ஒட்சிசனை எடுத்துக்கொள்வது மிகவும் ஆபத்தானது என்றும் அதிகளவு ஒட்சிசனை வழங்குவது நிமோனியாவுக்கு வழிவகுக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். 02≫

30ஆம் திகதி நாடு திறக்கப்படுமா?

மூடும் வாய்ப்பில்லை என்கிறார் சுகாதார அமைச்சர் கெஹேலிய

தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை 30ஆம் திகதிக்குப் பின்னரும் நீடிக்கக் கூடாதென்பதே எனது விருப்பமாகும் என சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார். 02≫

அரசாங்கத்தால் நிவாரணத்துக்கு பதிலாக அசௌகரியம்

சஜித் குற்றச்சாட்டு

நாட்டை பாதுகாப்பதற்கான கூட்டுத் திட்டங்களில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக அன்றைய நாளை கடத்துவதற்காக நாளுக்கு நாள் அரசாங்கம் தலைப்புச் செய்திகளை உருவாக்கிக்கொண்டிருக்கிறது - என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

விசேட அறிக்கையொன்றின் மூலம் அவர் நேற்று இதனைத் தெரிவித்துள்ளதுடன், அவ்வறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதுகுறித்து ஐக்கிய மக்கள் சக்தி தீவிரமாக அவதானத்தைச் செலுத்தியுள்ளது. சரிந்துள்ள இந்த நிலைமையிலும் சரிந்துவரும் இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புவதிலும் மிகுந்த கவனம் செலுத்தி வருவதோடு, அரசாங்கம் என்ன பிரயோக நடைமுறை நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை அறிய ஆர்வமாகவுள்ளது.

அரசாங்கம் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குப் பதிலாக அசௌகரியங்களையே வழங்குகிறது. தனிமைப்படுத்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணப் பொதியை அரசாங்கம் பறிமுதல் செய்து, பின்னர் உதவியற்ற மக்களை குறிவைத்து மற்றொரு... 02≫

சிறுவர் வைத்தியசாலையில் 200 சிறுவர்களுக்கு சிகிச்சை

•யோ.தர்மராஜ்

கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்ட 200 சிறுவர்கள் தற்போது கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதாக வைத்தியர் ஜெ.விஜேசூரிய தெரிவித்தார்.

அத்தோடு, சிகிச்சைபெறும் சிறுவர்களில் 4 பேர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, சிறுவர்களிடையே கொரோனா தொற்று எண்ணிக்கையில் சிறிது அதிகரிப்பு காணப்படுவதால், கொரோனா தொற்றால் பாதிக்கப்படும் சிறுவர்களுக்கு சிகிச்சையளிக்க நேற்றுமுதல் மற்றொரு வார்ட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்படி, வைத்திய சாலையின் 8ஆவது வார்ட்டே இவ்வாறு ஒதுக்கப் பட்டுள்ளதுடன்,... 02≫

கொரோனா தொற்றினால் உயிரிழந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு கொழும்பு கங்காராமையில் நேற்று புண்ணியதான நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன, அமைச்சர்களான மஹிந்த அமரவீர, தயாசிறி கமகே ஆகியோர் கலந்துகொண்டபோது... (படப்பிடிப்பு : பிரதீப் தம்பரகே)

வைத்திய ஆலோசனைக்கமைய நாட்டை முடக்கி வையுங்கள்

அரசுக்கு ரணில் அறிவுரை

•யோ.தர்மராஜ்

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவையும் வைத்திய ஆலோசனைக்கமைய செயற்படவேண்டும். கொரோனா தொற்றை கட்டுப்படுத்துவதற்கு இன்னும் ஓரிரு வாரங்களுக்கு நாடு முடக்கப்படவேண்டுமாக இருந்தால் அதன்பிரகாரம் நாட்டை முடக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அத்தோடு, நாட்டை முடக்குவதால் ஏற்படும் பொருளாதார பாதிப்பிலிருந்து மீள்வதற்கு ஐ.எப்.எம் உடன் பேச்சுவார்த்தை நடத்தி... 02≫

4 கோடி ரூபா பெறுமதியான கஞ்சாவுடன் இருவர் கைது!

இந்தியாவிலிருந்து படகொன்றில் யாழ்ப்பாணத்துக்கு கடத்திவரப்பட்ட சுமார் 41 மில்லியன் ரூபா பெறுமதியான 139 கிலோகிராம் கஞ்சாவுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

பருத்தித்துறை கடற்பரப்பில் நேற்றுக் காலை 6 மணிக்கு இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக கடற்படை தெரிவித்துள்ளது.

பருத்தித்துறை கடற்பரப்பில் ரோந்து நடவடிக்கையில்... 02≫

கொரோனா தொற்றில் கணவர் பலி! திருமண நாளில் மனைவியும் மரணம்

பெற்றோரை இழந்து 5 வயது சிறுமி அநாதரவு

கொவிட்-19 தொற்று காரணமாக இளம் தந்தையையும் தாயையும் இழந்த எதுவும் அறியா 5 வயது பெண் குழந்தை நிர்க்கதிக்குள்ளாகியுள்ளது.

கிரிபத்கொடையில் வசிக்கும் பிரபல ஆங்கில ஆசிரியரான தனஞ்சய அனுருத்த (வயது 36) கொவிட்-19 தொற்றுக்கிலக்காகி, ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை உயிரிழந்துள்ளார். 02≫

கொரோனா சிகிச்சைபெற்று வீடு திரும்பிய மூதாட்டியை வீட்டுக்குள் சேர்க்காத அவலம்

தங்க இடமின்றி நிர்க்கதி

பல்லேவெல, நுங்கமுவ பகுதியில் கொரோனா தொற்றுக்குள்ளாகி சிகிச்சைபெற்று வீடு திரும்பிய 74 வயதான மூதாட்டியை உறவினர்கள் வீட்டுக்குள் அனுமதிக்காததால், மூன்று நாட்களாக குறித்த மூதாட்டி வீட்டுக்கு வெளியில் தங்கியுள்ளார்.

வீட்டிலுள்ள உறவினர்கள் உணவு, நீர் எதுவும் வழங்க மறுத்துள்ள நிலையில், அயலவர்களின் உதவியுடன் அவர் நாட்களை கடத்திவந்துள்ளார். குறித்த மூதாட்டி... 02≫

ஆளுங்கட்சியின் உதவி கொறடாவாக பிரமித்த பண்டார தென்னக்கோன் நியமனம்

ஆளுங்கட்சியின் உதவி கொறடாவாக நாடாளுமன்ற உறுப்பினர் பிரமித்த பண்டார தென்னகோன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டார்.

அதற்கான நியமனக் கடிதம் பிரதமரால் நேற்று அலரி மாளிகையில் வைத்து நாடாளுமன்ற உறுப்பினர் பிரமித்த பண்டார தென்னகோனிடம் வழங்கப்பட்டது. 2021 செப்டெம்பர் முதலாம் திகதிமுதல் அமுலுக்கு வரும் வகையில் இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி சாகர காரியவசம், ஆளும் கட்சியின் பிரதம கொறடாவின் செயலாளர் சட்டத்தரணி சமிந்த குலரத்ன ஆகியோர் கலந்துகொண்டனர்.

யாழ். தனியார் வங்கியில் 12 ஊழியர்களுக்கு கொவிட்

யாழ். போதனா வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள தனியார் வங்கியின் பிரதான கிளையில் பணியாற்றும் 12 பேருக்கு கொரோனா தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து, அந்தக் கிளையில் பணியாற்றும் 40 உத்தியோகத்தர்களும் சுத்திகரிப்பு தொழிலாளிகளும் சுயதனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

குறித்த தனியார் வங்கியின் யாழ்ப்பாணம் பிரதான கிளையில் பணியாற்றும் உத்தியோகத்தர் கள், சுத்திகரிப்புத் தொழிலாளிகள் என 34 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அவர்களில் சுத்திகரிப்பு தொழிலாளி ஒருவர் உட்பட 12 பேருக்கு கொரோனா தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது. அதனால் அங்கு பணியாற்றும் 40 உத்தியோகத்தர்களை சுய தனிமைப்படுத்தி, வங்கியை தற்காலிகமாக மூடுமாறு மாநகர சுகாதார வைத்திய அதிகாரி அறிவுறுத்தியுள்ளார். மேலும், அங்கு நிரந்தரக் கடமையாற்றுபவர்கள் தவிர்ந்த வேறு கிளைகளில் பணியாற்றும் உத்தியோகத்தர்களைக் கடமைக்கு அமர்த்தி, உரிய சுகாதார நடைமுறைகளின் கீழ் கிளையின் நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்கலாம் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

கொரோனாவென்பது சாதாரண காய்ச்சல் மாத்திரமே

எஸ்.பி. திஸாநாயக்க தகவல்

கொரோனா என்பது ஆபத்தான நோய் அல்லவெனவும் அது சாதாரண காய்ச்சலே என ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்தே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ்வாறு கொரோனா தொற்றுக்குள்ளாகும் நோயாளர்களில் 81 சதவீதமானவர்கள் எவ்விதமான சிரமங்களும் இன்றி பூரண குணமடைவதாகவும், 14 சதவீதமானவர்கள் மட்டுமே காய்ச்சல், இருமல் போன்றவற்றால் சிறிது சிரமத்திற்கு உள்ளாகி, பின்னர் குணமடைவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் இலங்கையில் கொரோனா மரணமானது இன்னும் 1.9 வீதமாகவே காணப்படுவதாகவும் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

கொரோனா சிகிச்சைபெற்று...

தன் சகோதரனுடன் நீண்டகாலமாக வசித்துவந்துள்ள நிலையில் அண்மையில் அவருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டு, மீரிகம மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு அவருக்கு கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான பின்னர் வெள்ளவத்தை சிகிச்சை மையத்தில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுள்ளார். இந்நிலையில், பத்து நாட்கள் சிகிச்சையளிக்கப்பட்டு, 21ஆம் திகதி இரவு தன் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

எனினும், அவரது சகோதரன் வீட்டுக் கதவை திறந்து, அவரை வீட்டுக்குள் அனுமதிக்கவில்லை. இதையடுத்து, வீட்டின் வெளிப்புற படிக்கட்டிலேயே அவர் தங்கியுள்ளார்.

வெள்ளவத்தை சிகிச்சை மையத்தில் தான் அணிந்திருந்த ஆடைகளைத்தான் இன்னும் அணிந்திருப்பதாகவும், ஓர் ஆடையை எடுப்பதற்கு அறைக்கு செல்லக்கூட சகோதரன் அனுமதிக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

அவரது மகள் கந்தலாம பகுதியிலுள்ள ஒரு வீட்டில் பணிபுரிந்து வருவதாகவும், ஊரடங்கு காரணமாக அவரால் தாயார் இருக்குமிடத்திற்கு செல்ல முடியவில்லையென்றும் தெரிவித்துள்ளார்.

அந்தப் பகுதிக்கு பொறுப்பான பொதுச் சுகாதார பரிசோதகர் குறித்த விடயத்தில் தலையிட்டு, மூதாட்டியை வீட்டுக்குள் அனுமதிக்கும்படி சகோதரனை அறிவுறுத்திய நிலையிலும் அவர் மறுப்பு தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தங்குமிட வசதியின்றி கவனிப்பாரற்று குறித்த மூதாட்டி நிர்க்கதிக்குள்ளாகியுள்ளார்.

30ஆம் திகதி நாடு...

நாட்டை முடக்கிவிட்டு கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடியாது என்பதை உலக நாடுகள் அனைத்தும் தற்போது ஒப்புக் கொண்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரி வித்தார்.

பல தரப்பினரின் கோரிக்கைகளுக்கு அமைவாகவே இம்முறை நாடு முடக்கப்பட்டதா கவும் அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

உலகின் முன்னணி நாடுகள் பலவும் நாட்டை முடக்கிவிட்டு முன்னேறிச்செல்வது கடினமென்றும், நாடு திறக்கப்பட வேண்டும் என்பதோடு, சுகாதார வழிமுறைகளுக்கமைவாக கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, தற்போது அமுல்படுத் தப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவை நீடிக்கலாமா, தளர்த்தலாமா என்பது தொடர்பில் இன்று அறிவிக்கப்படும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் இன்று கூடவுள்ள கொவிட் தடுப்பு செயலணி குழுக் கூட்டத்தில் இது தொடர்பில் இறுதித் தீர்மானம் எட்டப்படும் எனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

ஒட்சிசன் ...

ஒரு நோயாளிக்கு பரிந்துரைக்கப்பட்ட அளவே ஒட்சிசன் வழங்கவேண்டும் என்பதோடு, நோயாளிக்கு ஒட்சிசனை வழங்க தேவையான உபகரணங்கள் இருக்கவேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டிலுள்ள வைத்தியசாலைகளில் தேவையான ஒட்சிசன் இருப்பதால் வீடுகளில் ஒட்சிசனை சேமிக்கவேண்டிய தேவை இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

6 மாத பச்சிளம்...

இதனையடுத்து வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டபோதும் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை குறித்த கைக்குழந்தை மரணமடைந்துள்ளது.

சிறுவர் வைத்தியசாலையில்...

இதுவரை 6 வார்ட்கள் சிறுவர் சிகிச்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாக லேடி ரிட்ஜ்வே வைத்திய சாலையின் பணிப்பாளர் வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட சிறுவர் களுக்கு சிகிச்சை அளிக்கப்படுவதுடன், ஏனைய நோய் தாக்கங்களுக்குள்ளாகும் சிறுவர்களுக்கு அதிகபட்ச சிகிச்சை அளிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

4 கோடி ரூபா...

ஈடுபட்டிருந்தபோது, சந்தேகத்துக்கிடமான படகொன்றை சோதனையிட முயன்றபோது, சந்தேகநபர்கள் கஞ்சா போதைப்பொருள் பொதிகளை கடலில் வீசியுள்ளனர்.

இருந்தபோதிலும் விரைந்து செயற்பட்ட கடற்படையினர் கடலில் வீசப்பட்ட கஞ்சா போதைப்பொருட்களை மீட்டனர்.

அதனையடுத்து படகில் இருந்த இருவரையும் கைதுசெய்ததுடன், மீட்கப்பட்ட கஞ்சா மற்றும் படகையும் கடற்படையினர், பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கொரோனா தொற்றில்...

தனது கணவர் இறந்த சோகத்தில் அவர் இறந்த மறுநாள் புதன்கிழமை அவர்களது ஆறாவது திருமண நாளன்று அவரது மனைவி அஞ்சலி பெரேரா (வயது 27) உயிரிழந்துள்ளார்.

இதனத் தொடர்ந்து, அவர்கள் இருவரினதும் ஒரே குழந்தையான 5 வயது மகள் தாயையும் தந்தையையும் இழந்து நிற்கின்ற சோகமான நிலை உருவாகியுள்ளது.

தனஞ்சய அனுருத்தவின் இறுதிக்கிரியைகள் பியகமவில் இடம்பெற்றதோடு, அவரது மனைவியின் இறுதிச்சடங்குகள் நேற்று இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

50 வயதுக்கு மேற்பட்டவர்களின் மரண வீதம் 8.1 ஆக அதிகரிப்பு

பேராசிரியர் நீலிகா மாலவிகே தெரிவிப்பு

சினோபார்ம் தடுப்பூசி பெற்றுக்கொண்ட 50 வயதுக்கு மேற்பட்டவர்களின் உயிரிழப்புகளை விட அந்த வயதுக்குட்பட்டவர்களில் தடுப்பூசி பெற்றுக்கொள்ளாதவர்களின் மரண வீதத்தில் 8.1 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமை ஆய்வுகளில் தெரியவந்துள்ளதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவப் பிரிவின் பேராசிரியர் நீலிகா மாலவிகே தெரிவித்தார்.

இதுதொடர்பில் விளக்கமளித்து அவர் அவரின் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவொன்றில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பல்லேறுபட்ட 4 தடுப்பூசிகள் செயற்றிறனை ஒப்பிட்டுப் பார்த்த முதலாவது ஆய்வில் இது தெரியவந்தது. சினோபார்ம் தடுப்பூசி பெற்றுக்கொண்டதன் பின்னர் மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கமைய உறுதிப்படுத்தப்பட்ட கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 0.46 சதவீதமாக காணப்படுவதுடன், புள்ளிவிபரங்களின்படி இந்த சதவீதத்தின் அடிப்படையில் மரண எண்ணிக்கை 112 ஆக கணிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோன்று, சினோபார்ம், பைசர் - பயோ என்டெக் தடுப்பூசி பெற்றுக்கொண்டவர்களின் மரண வீதம் 0.15 ஆக காணப்படுகின்றது. அதனடிப்படையில் 3 பேர் மரணிக்கின்றனர்.

எஸ்ட்ராசெனிக்கா, கொவிசீல்ட் தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டவர்கள் தொடர்பான இந்த மதிப்பீடு 0.03 சதவீதமாக காணப்படுகின்றது. அதனடிப்படையில் ஒருவர் மாத்திரமே மரணிக்கிறார்.

குறித்த, அறிக்கைக்கமைய பைசர் மற்றும் ஸ்புட்னிக் - வி ஆகிய தடுப்பூசிகளை பெற்றுக் கொண்ட 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் உயிரிழந்

ததாக அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

வைத்தியசாலைகளில்...

பிரிவில் (ஐ.டி.எச்.) 240 நோயாளர்களும் காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் 222 நோயாளர்களும் களுபோவில வைத்தியசாலை யில் 300 நோயாளர்களும் வெலிசற வைத் தியசாலையில் 182 நோயாளர்களும் சிகிச்சை பெற்றுவருவதாக வைத்தியசாலை பணிப் பாளர்கள் தெரிவித்தனர்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் உள்ளிட்ட வைத்தியசாலை சுகாதாரப் பிரிவினர் 350 பேர் இதுவரை கொரோனா தொற்றுக்குள்ளா கியுள்ளதாக கொழும்பு தேசிய வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் 24 கட்டில்கள் மாத்திரமே இருந்தாலும் இதுவரை 30 கொரோனா நோயாளர்கள் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர். இதேவேளை, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நாளாந்தம் சாதாரணமாக 10 – 15 நோயாளர்கள் கொரோனா தொற்றினால் உயிரிழப்பதாகவும் வைத்தியசாலை வட்டார தகவல்கள் தெரிவித்தன.

ஐ.டி.எச். வைத்தியசாலையிலுள்ள இரண்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் இதுவரை 8 பேர் சிகிச்சைபெற்றுவருவதோடு, அங்கு நாளாந்தம் அண்ணளவாக 2 அல்லது 3 நோயாளர்கள் கொரோனா தொற்றினால் உயிரிழப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, களுபோவில வைத்தியசாலையில் வைத்தியர்கள் 10 பேரும் தாதியர் 10 பேரும் உள்ளடங்கலாக வைத்தியசாலை சுகாதார பிரிவினர் 130 பேர் இதுவரை கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதாக வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ருக்ஷான் பெல்லன தெரிவித்தார்.

அத்தோடு, அங்கு இதுவரை 300 கொரோனா நோயாளர்கள் சிகிச்சை பெறுவதாகவும் அதிதீவிர பிரிவுகள் அனைத்தும் நோயாளர்களால் நிரம்பி வழிகின்றதாக தெரிவித்த அவர், நாளொன்றுக்கு 16 – 20 நோயாளர்கள் உயிரிழப்பதாகவும் தெரிவித்தார்.

அங்குள்ள பிணவறையில் 37 குளிரூட்டிகள் இருப்பதாகவும் அதில் 7 தொடர்ந்து பாவனையி லுள்ளதாகவும் உயிரிழப்போரின் உடல்களை தகன நிலையங்களில் கிடைக்கும் இடவசதிக்கு ஏற்ப தகனம் செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

காலியிலுள்ள கராப்பிட்டிய போதனா லைத்தியசாலையில் 9 வைத்தியர்கள் மற்றும் 46 தாதியர்கள் உட்பட மொத்தம் 114 சுகாதாரப் பணியாளர்கள் இம்மாதம் முதலாம் திகதிமுதல் 25ஆம் திகதிவரை கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாக வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் ஷெல்டன் பெரேரா தெரிவித்தார்.

அதன்படி, இதுவரை 224 வைத்தியசாலை ஊழியர்கள் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள் ளனர். வைத்தியசாலையிலுள்ள நான்கு வார்ட்களில் கிட்டத்தட்ட 200 கொரோனா நோயாளிகள் தற்போது சிகிச்சைபெற்று வருவதுடன், 28 குழந்தைகள் கொரோனா தொற்றுக்குள்ளாகி ஒரு வார்ட்டில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார். நாளொன்றுக்கு 12 கொரோனா உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

காலி மாவட்டத்தில் தற்போது கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப் பதால், குழந்தைகள் வார்ட்டுடன் 150 நோயாளி களுக்கு ஐந்து புதிய வார்ட்கள் நேற்று ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

கம்பஹா மாவட்ட வைத்தியசாலையில் நான்கு வைத்தியர்கள், நான்கு தாதியர்கள் மற்றும் 25 துணை வைத்தியர்கள் கொரோனா சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக கம்பஹா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் சமன் பத்திரண தெரிவித்தார்.

தற்போது கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட 181 நோயாளிகள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும் 7 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு, 40 படுக்கைகள் கொண்ட 2 தீவிர சிகிச்சைப் பிரிவுகள், 80 படுக்கைகள்கொண்ட 3 ஒட்சிசன் வார்ட்கள் மற்றும் 16 படுக்கைகள் கொண்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஒரு வார்ட் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். நாள்தோறும் 10 முதல் 15 கொரோனா உயிரிழப்புகள் பதிவாவதாகவும் அவர் தெரிவித்தார்.

சுவாச நோய்களுக்கான வெலிசற தேசிய வைத்தியசாலையில் தற்போது 182 நோயா ளிகள் சிகிச்சைபெற்று வருவதுடன், அவர்களில் நான்கு வைத்தியர்கள் மற்றும் 10 தாதியர்கள் உட்பட 50 வைத்தியசாலை ஊழியர்கள் கொரோனா தொற்றுக்குள்ளாகி சிகிச்சைபெற்றுவருவதாக வைத்தியசாலை பணிப்பாளர் எல்.வணிகரத்ன தெரிவித்தார்.

இரத்தினபுரி பொது மருத்துவமனையின் மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள் உட்பட வைத்தியசாலை ஊழியர்கள் 60 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகி சிகிச்சைபெற்றுவருவதாக வைத்திசாலை பணிப்பாளர் வைத்தியர் அனோஜ் ரொட்ரிகோ தெரிவித்தார்.

அத்தோடு, தற்போது சிகிச்சைக்காக வைத்திய சாலைக்கு வரும் பெரும்பாலான நோயாளிகளுக்கு ஒட்சிசன் தேவை ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தால்...

அடியை மேற்கொண்டுள்ளது.

அதுதான் இதுவரை கொடுக்கப்பட்ட ஐயாயிரம் ரூபா கொடுப்பனவுக்கு பதிலாக ஆயிரத்து தொள்ளாயிரத்து 98 ரூபாவிற்கு “கற்பனையான சலுகைப் பொதி” என்று அழைக்கப்படும் நிவாரணப் பொதியை கொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ள விடயமாகும். கொள்வனவு செய்யும்போது இலவசமாக வீட்டுக்கு அனுப்பு வது தொடர்பாக அரசாங்கத்தால் கூறப்பட்ட விடயம் பொய்யான அறிவிப்பாகும்.

அதுவும் ஒரு முழுமையான மோசடி என்பதோடு, இந்த பேரழிவு தருணத்தில் நிவாரணத்திற்கு பதிலாக மக்கள் மீது அசௌகரியங்களைத் திணிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. புதிய நிதியமைச்சர் நியமிக்கப்பட்ட பிறகு, நாட்டிற்கு சௌபாக்கியத் தைக் கொண்டுவருவதாக பெருமை பேசினார்கள், பொருட்களின் விலைகள் முன்னெப்போதையும் விட கடுமையாக உயர்ந்துள்ளதோடு, பொருளாதாரம் இருந்ததைவிட மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது. முன்னைய வாரங்களில் ஒரு கிலோ சீனியின் விலை 160 ரூபாவாக இருந்ததோடு, ஒரு வாரத்திற்குள் அது 50 ரூபாவால் அதிகரித்துள்ளது. விலைகள் மீதான கட்டுப்பாட்டை அரசாங்கம் எவ்வாறு இழந்துள்ளது என்பதை இது காட்டுகிறது.

சந்தையில் பால்மாவிற்கு அசாதாரண பற்றாக்குறை உள்ளதை காணக்கிடைப்பதோடு எரிபொருள், எரிவாயு, அரிசி, மருந்துகள் மற்றும் பாண் உள்ளிட்ட பல நுகர்வோர் பொருட்களின் விலைகள் அசாதாரணமாக உயர்ந்துள்ளன. நாட்டில் அதிகப்படியான மருந்துகள் இருப்பதாக பொய் சொல்லும் அரசாங்கத்தின் பொறுப்புள்ள அமைச்சர்கள் தூதுவர்கள் மூலம் மருந்துகளை கோருகின்றனர்.

நாட்டைக் கட்டியெழுப்புவது எப்படி போனாலும், மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய தேவைகளைக்கூட அரசாங்கத்தால் வழங்கமுடியாது என்பதுவே இதன் யதார்த்தமாகும். நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று குறித்து பரிசோதனைக்குட்படுத்தும் நபர்களில் நோயாளர்களாக இனங்காணப்படும் விகிதம் 15.8 வீதத்தை தாண்டியுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக்காட்டுவதோடு, நிலைமை மிகவும் ஆபத்தானது என்பது அவர்களின் கணிப்பு என்றும் கூறுகிறது.

இதற்கிடையில், மருந்துகள், கொள்வனவு, மற்றும் பதிவு போன்ற தகவல்கள் அடங்கிய தேசிய ஔடத கட்டுப்பாட்டுச் சபையின் கிளவுட் எனப்படும் தரவு பாதுகாப்புப் பிரிவில் சேமிக்கப்பட்ட தகவல்களை அழிப்பது ஒரு சர்ச்சைக்குரிய நிகழ்வாகுவதோடு, இது ஆபத்தான ஒரு விடயமாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். இந்தத் தரவை அழிப்பதற்குப் பின்னால் ஒரு மோசடி வியாபாரக் கும்பல் இருக்கிறதா என்று துல்லியமான மற்றும் பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும்.

அன்றாட வாழ்க்கை குறித்தும் எதிர்கால வாழ்க்கை குறித்ததுமான மக்களின் நம்பிக்கைகளின் எதிர்பார்ப்பளவு கடுமையாக சிதைந்துள்ள நிலையில், சரியான திட்டம் மற்றும் இலக்கில்லாததால் அரசாங்கமும் விரக்தியடைந்துள்ளது. “இலங்கையைப் பாதுகாப்பதற்கான” கூட்டுத் திட்டங்களில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, அன்றைய நாளை கடத்துவதற்காக நாளுக்கு நாள் அரசாங்கம் தலைப்புச் செய்திகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

இதுகுறித்து ஐக்கிய மக்கள் சக்தி தீவிரமாக அவதானத்தைச் செலுத்தியுள்ளதோடு, சரிந்துள்ள இந்த நிலைமையிலும், சரிந்துவரும் இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புவதிலும் மிகுந்த கவனம் செலுத்தி வருவதோடு, அரசாங்கம் என்ன பிரயோக நடைமுறை நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை அறிய நாங்கள் ஆர்வமாக உள்ளோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

வைத்திய ஆலோசனைக்கமைய...

உதவிகளை பெற்றுக்கொள்ளுமாறும் அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

கொரோனா தொற்றை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கான தடுப்பூசிகளை சமந்தா பவரிடம் கோரிய முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர உயிரிழந்துவிட்டார். அத்தோடு, மங்கள சமரவீர, ராஜமகேந்திரன், டி.எஸ்.விஜேசிங்க ஆகியோரும் பிரதான சட்டத்தரணிகள் மற்றும் சட்டத்தரணி கௌரி தவராசா உட்பட்ட முக்கியமானவர்களும் கொரோனா தொற்றி னால் உயிரிழந்துள்ளனர். எனக்கு தெரிந்த உறவினர்கள் 6 பேர் திங்கட்கிழமை மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் உயிரிழந்துள்ளனர்.

கொரோனா தொற்று தீவிரமாக பரவி வருகின்றது. தடுப்பூசிகள் பெற்றுக்கொள்வோரின் எண்ணிக்கை அதிகரித்தாலும் கொரோனா தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன. ஓகஸ்ட் 7ஆம் திகதி மணரங்களின் எண்ணிக்கை 5 ஆயிரமாக காணப் பட்டது. ஆனால், இன்றைய தினம் (நேற்று) நிறைவடையும்போது அந்த எண்ணிக்கை 8 ஆயிரத்தை தாண்டிவிடும். அவ்வாறாயின் 20 நாட்களில் மரணங்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்தால் அதிகரித்துள்ளது.

கொரோனா தொற்றுக்குள்ளாகுவோரின் எண்ணிக்கை 5 ஆயிரமாக காணப்படுகின்ற போதிலும் 4 ஆயிரமாகவே அறிவிக்கப்படுகின் றன. ஆகவே, எண்ணிக்கையிலும் பிரச்சினைகள் காணப்படுகின்றன. தொற்றுக்குள்ளா னோரிடத் திலிருந்து ஏனையோருக்கு பரவுவதை தடுப்பது முக்கியமாகவுள்ளது.

தொற்றுப் பரவுவதை தடுப்பதற்கு ஒரே வழி நாட்டை முடக்குவதாகும். அரசாங்கத்தினால் 10 நாட்களுக்கு நாடு முடக்கப்பட்டுள்ளது. எனினும், வைத்திய ஆலோசனைக்கமைய இந்த நாட்கள் குறைவாகும். ஆகவே, இன்னும் ஒரு வாரத்திற்கோ அல்லது இரு வாரத்திற்கோ நாட்டை தொடர்ந்து முடக்குமாறு நான் கோரிக்கை விடுக்கின்றேன்.

அரசாங்கத்தினால் 10 நாட்களுக்கு நாடு முடக்கப்பட்டதற்கு நாங்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கியுள்ளோம். எனினும், மறுபக்கத்தில் நாடு முடக்கப்பட்டால் பொருளாதார பாதிப்பு ஏற்படுகின்றன. எனினும், தற்போதைய நிலையில் நாட்டை முடக்குவதால் ஏற்படும் பாதிப்பை விட நாட்டை முடக்காதிருப்பதால் ஏற்படும் பாதிப்பு அதிகமாகும்.

இந்நிலையில் ஐ.எம்.எவ். உடன் பேச்சு வார்த்தை நடத்தி பொருளாதார ரீதியில் முன் னேறுவதற்கு உதவிகளை பெற்றுக்கொள்ள வேண்டும். கொரோனா தொற்றை கட்டுப்படுத்து வதற்கு தற்போது வரை 72 கோடி டொலர் வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே, ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவையும் வைத்திய ஆலோசனைக் கமைய செயற்பட வேண்டும். கொரோனா தொற்றை கட்டுப்படுத்துவதற்கு இன்னும் ஒன்று அல்லது இரு வாரங்களுக்கு நாடு முடக்கப்பட வேண்டுமாக இருந்தால் அதனை நடைமுறைப்படுத்த வேண்டும். இதற்காக அனைவரின் ஒத்துழைப்பும் கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம் - என்றார்.

இன்றைய ராசி பலன்

நாள்: 27.08.2021 வெள்ளிக்கிழமை - ஆவணி 11

ஜோதிடர் நற்பவி

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

அசுப நேரங்கள்

சுப நேரங்கள்
காலை 6.07 - 7.36
மாலை 4.49 - 6.16

ராகு காலம்
காலை 10.42 - 12.14

குளிகை காலம்
காலை 7.38 - 9.10

எமகண்ட காலம்
மாலை 3.17 - 4.48

துர் முகூர்த்தம்
காலை 8.31 - 9.20
பி.ப. 12.37 - 1.26

நட்சத்திரம்: அஸ்வினி
26.08.2021 இரவு 10.29
28.08.2021 அதிகாலை 12.47

யோகம்: விருத்தி
அதிகாலை 5.25 - 28.08.2021
அதிகாலை 5.54 வரை

திதி: அமர பட்ச பஞ்சமி
மாலை 6.49 வரை

அமர பட்ச சஷ்டி
மாலை 6.49 - 28.08.2021 இரவு 8.56

முற்கரணம்: தைதுலம்
அதிகாலை 5.57- மாலை 6.49 வரை

பிற்கரணம்: கரஜம்
மாலை 6.49 - 28.08.2021 காலை 7.49 வரை

மேடம்
மாணவர்கள் கல்வியில் திறம்பட இருப்பார்கள். வாழ்க்கையின் சில தடைகள் நீங்கப் பெறும். வீட்டில் சில பணிகள் நிறைவுபெற துவங்கும்.

ரிஷபம்
பெற்றோருடன் கருத்து வேறுபாடுகள் மறந்திருப்பது நன்மை. தெளிவாக ஆராய்ந்து புதிய தொழில் துவங்கலாம். மன நிம்மதி பெற இறை தியானம் தேவை.

மிதுனம்
வழக்கு விடயங்களில் சாதகமான நிலை உண்டாகலாம். வீடு சம்பந்தப்பட்ட விடயங்களிலும் நன்மை கிடைக்கலாம். உடல்நலத்திலும் அவதானம் தேவைப்படலாம்.

கடகம்
கோபங்களை தவிர்ப்பது நன்மை. அதிக வருவாய்க்கான பணிகள் கிடைக்கப் பெறலாம். அதிக முதலீட்டில் செய்யும் சில தொழில் வணிகத்தில் சிறந்த இலாபங்கள் கிடைக்கப் பெறலாம்.

சிம்மம்
வேலைத்தளங்களில் சில சூழ்நிலைகளில் மாற்றம் உண்டாகலாம். அவசர தேவைகளுக்கான கடன் தவிர, மற்ற கடன்கள் பெறுவதை இன்று தவிர்ப்பது நன்மை.

கன்னி
பிறரின் விடயங்களில் தலையிட வேண்டாம். இல்லத்தில் சில பிரச்சினைகள் மற்றும் கவலைகள் குறைய இறைவணக்கம் நன்மை.
சந்திராஷ்டமம்: உத்தரம் நட்சத்திரம் பாதம் 2/3/4க்கு மாலை 6.10 வரை அத்தம் நட்சத்திரத்திற்கு மாலை 6.10 இலிருந்து 28.08.2021 இரவு 8.51 வரை

துலாம்
சிறிய வியாபாரங்களில் இலாபங்கள் அதிகரிக்கலாம். கலைத்துறையினரின் மதிப்பு பெருகும். உயர்நிலையில் உள்ளோரின் ஈர்ப்பு உண்டாகலாம்.

விருச்சிகம்
வீட்டின் திருத்தவேலைகள் நடைபெறலாம். வீடு/காணி விடயங்கள் பலன் தரும். தேவையற்ற பிரச்சினைகள் குறைய துவங்கும்.

தனுசு
எதிர்மறை சிந்தனைகளை ஆன்மீக வழிபாடுகளால் நீக்கிக் கொள்ளலாம். அரசாங்க வேலைகளில் இருப்பவர்களுக்கு சிறிய கவலைகள் உண்டாகலாம்.

மகரம்
வீட்டில் சிறிய பிரச்சினை, உறவுகளில் மனக்கவலைகள் குறைய இன்று இறைவணக்கம் தேவை. செலவுகளில் கவனம் தேவை.

கும்பம்
எழுத்தாளர்கள் புதிய ஆக்கங்களை தரலாம். சகோதரர்களின் உதவிகள் கிடைக்கப் பெறலாம்.

மீனம்
இல்லத்தில் சிறிய பிரச்சினைகள் ஏற்படலாம். கல்வியிலும் கவனம் தேவை. இறைவணக்கம் நன்மை.

கொரோனா வைரஸ் தொற்று தற்காலிக ஏற்பாடுகள் சட்டமூலம் நடைமுறைக்கு

கொரோனா வைரஸ் தொற்றுக்கான (கொவிட்-19) தற்காலிக ஏற்பாடுகள் 2019 சட்டமூலத்துக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அண்மையில் தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப்படுத்தியதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி இந்தச் சட்டமூலம் வாக்கெடுப்பின்றி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

கொரோனா சூழ்நிலைகளின் காரணமாக விதித்துரைக்கப் பட்ட காலப்பகுதியினுள் புரியப்படுவதற்கென சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட குறித்த சில வழக்குகளைப் புரிவதற்கு எந்த நிலைமைகள் தொடர்பில் ஆட்கள் இயலாதிருந்தனரோ அந்த நிலைமைகள் தொடர்பிலான தற்காலிக ஏற்பாடுகளைச் செய்வதற்கும், இந்தச் சூழ்நிலையில் நீதிமன்றம் ஒன்று தொழிற்பட முடியாதிருக்குமிடத்து மாற்று நீதிமன்றங்களைக் குறித்தளிப்பதற்குமான ஏற்பாடுகளைச் செய்வதும் இதன் நோக்கமாகும்.

அத்துடன், கொரோனா சூழலைக் கட்டுப்படுத்த வசதியளிப் பதற்கும் தொலைத்தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நீதிமன்ற நடவடிக்கைகளை நடத்துவதற்கும், கொரோனா சூழ்நிலைகள் காரணமாக ஒப்பந்தம்சார் கடப்பாடுகளை புரிவதற்கும் இயலாதவர்களாகவிருந்த குறித்த சில ஒப்பந்தங்களுக்கான திறந்தவர்கள் தொடர்பில் நிவாரணத்தை அளிப்பதற்கும் மற்றும் அதனோடு தொடர்புபட்ட இடைநேர் வினையான கருமங்களும் இந்தச் சட்டத்தின் ஊடாக முன்னெடுக்கப்படும்.

அதற்கமைய, 2021ஆம் ஆண்டு 17ஆம் இலக்க 2019 கொரோனா வைரஸ் தொற்று (கொவிட்-19) (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம் கடந்த 23ஆம் திகதிமுதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கல்வி பணிக்குழுவுக்கு ஆலோசனை வழங்க புதிய குழு நியமனம்

(ஒலுவில் நிருபர்)

கல்வி பணிக்குழுவில் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்க தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் உள்ளடங்கலாக புதிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் புதிய குழுவினர் நியமிக்கப்பட்டுள்ளனர். இதில் துணைவேந்தரான சிரேஷ்ட பேராசிரியர் ஆர்.பி.கஹலிய ஆராச்சி, தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், பேராசிரியர் எம்.டி.லமாவன்ச, பேராசிரியர் பி.எம்.சி. திலக்கரத்ன, பேராசிரியர் ஆர்.யூ.எஸ்.கே.ரத்னாயக்க, கலாநிதி ஜே.எல்.ரத்னசேகர, தீபா லியனகே மற்றும் ஒஷத சேனாநாயக்க ஆகியோர் புதிய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ராஜகிரிய காளி கோயில் பிரதம குரு காலமானார்

ராஜகிரிய, மஹா வீர பத்திரகாளி அம்மன் ஆலய பூசகரும் பிரதம குரு வாஸ்து சித்தர் ஸ்ரீவித்யா உபாசகர் சுவாமி காளி கனகரத்தினம் காலமானார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி சிகிச்சைபெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் நேற்று முன்தினம் காலமானதாக ஆலய நிர்வாக சபை தெரிவித்துள்ளது. இவர், கொழும்பு, ராஜகிரிய பகுதியில் வசித்துவந்தமை குறிப்பிடத்தக்கது.

ஊரடங்கு காலத்தை சாதகமாகப் பயன்படுத்தி மட்டக்களப்பில் ஆறு பசு மாடுகள் திருட்டு

வாகனத்துடன் இருவர் கைது

(மண்முனை நிருபர்)

மட்டக்களப்பு, வவுணதீவு பொலிஸ் பிரிவில் வாகன மொன்றில் ஆறு பசு மாடுகளைத் திருடிய இருவர், ஏற்றிவந்த வாகனத்துடன் வவுணதீவு பொலிஸாரால் நேற்று முன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்கவின் ஆலோசனைக்கமைவாக வவுணதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.டி.நிசாந்த அப்புஹாமியின் வழிகாட்டலில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வவுணதீவு பிரதேசத்திலுள்ள பன்சேனை பகுதியில் மேய்ச்சல் தரையில் நின்ற பிரதேச மக்களின் ஆறு வளர்ப்பு மாடுகளைப் பிடித்து திருட்டுத்தனமாக சிறிய கென்டனர் வாகனமொன்றில் ஏற்றி சுவாசிக்க போதிய இடைவெளி இல்லாமல் முற்றாக மூடிய நிலையில், பசுக்களை வதைக்குள்ளாக்கிக்கொண்டு சென்றபோதே வவுணதீவு பொலிஸ் நிலைய விசேட புலனாய்வுப் பிரிவினர், குறித்த வாகனத்துடன் அதிலிருந்த இருவரையும் கைதுசெய்துள்ளனர்.

ஊரடங்கு முடக்க காலத்தை சாதகமாக பயன்படுத்தி மக்கள் நடமாட்டம் இல்லாத வேளையில், ஆறு மாடுகள்

களவாடப்பட்டு அனுமதிப்பத்திரம் இல்லாது காத்தான்குடிக்கு கொண்டுசென்றபோதே இம்மாடுகளும் வாகனமும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் நீதிமன்றம் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், பிரதேசத்திலுள்ள உரிமையாளர்களின் மாடுகள் காணாமல் போயிருந்தால் வவுணதீவு பொலிஸாரை தொடர்புகொள்ளுமாறும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.டி.நிசாந்த அப்புஹாமி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அமைக்கப்பட்டுள்ள வீதித்தடைகளில் நேற்று பொலிஸாரால் வாகனங்கள் நிறுத்தப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள். (படப்பிடிப்பு : பிரதீப் தம்பரகே)

கொரோனா தொற்றுக்குள்ளானோர் விபரம்

மொத்த பாதிப்பு	சிகிச்சை பெறுவோர்	குணமடைந்தோர்	புதிதாக அடையாளம்	மரணம்
4,07,768	50,890	3,51,068	4,483	7,948

கைத்தொலைபேசியால் வந்த வினை;

பெற்றோர் கண்டித்ததால் மாணவன் தற்கொலை

மாத்தறையில் சோகம்

கைத்தொலைபேசியில் கேம் விளையாடிய மாணவன் ஒருவர், பெற்றோர் கண்டித்ததால் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

மாத்தறை பகுதியில் கடந்த 23ஆம் திகதி இந்தச் சம்பவம் நடந்தது.

15 வயதான மாணவனின் இணையவழி கல்விக்காக பெற்றோர் கைத்தொலைபேசி வாங்கிக்கொடுத்திருந்தனர். அதில் 'கேம்' விளையாட ஆரம்பித்த மாணவன், நாளடைவில் அதற்கு அடிமையாகிவிட்டார். நாள் முழுவதும் கேம் விளையாடிக்கொண்டிருந்துள்ளார்.

அளவிற்கதிகமாக கேம் விளையாடிய அவர், இணையவழி வகுப்புகளில் பங்குபற்றுவதை தவிர்த்துக்கொண்டு கேம் விளையாடியுள்ளார். மாணவன் வகுப்பில் கலந்துகொள்ளாமல் விட்டதையடுத்து, ஆசிரியரால் பெற்றோருக்கு சுட்டிக்காட்டப்பட்டது.

மாணவன் கேம் விளையாடுவதிலேயே பொழுதை கழிப்பதை அறிந்த தாயார், கைத்தொலைபேசியை வாங்கி வைத்துவிட்டார். கேம் விளையாட கைத்தொலைபேசி இல்லையென்ற விரக்தியில் மாணவன் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

நடமாடும் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் அம்பாறையில் நேற்றுமுதல் ஆரம்பம்

(பாறுக் ஷிஹான்)

கொரோனா அனர்த்த நிலைமை காரணமாக இராணுவத் தளபதியின் வழிகாட்டலின்கீழ் நாடுபூராகவும் முன்னெடுக்கப்பட்டுவரும் நடமாடும் தடுப்பூசி வழங்கும் திட்டமானது அம்பாறை மாவட்டத்தில் முதற்கட்டமாக கல்முனை பிராந்திய சுகாதார சேவை பணிமனை பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டமானது நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் பறூசா நக்பர் தலைமையில் ஆரம்பமானதுடன், இராணுவத்தினரின் நடமாடும் தடுப்பூசி வழங்கும் செயற்பாடும் முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை பிராந்தியத்திற்கு மேலதிகமாக கிடைத்துள்ள 20 ஆயிரம் தடுப்பூசிகள் அனைத்தும் பிராந்தியத்திலுள்ள 13 சுகாதாரப் பிரிவுகளிலும் விடுபட்ட 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் மற்றும் கர்ப்பிணித்

தாய்மார்களுக்கு ஏற்றப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதற்கிணங்க இச்செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நிந்தவூர் பகுதிகளில் நேற்று வீடு வீடாகச் சென்று தடுப்பூசிகள் ஏற்றுவதற்கு இராணுவத்தினரும் ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர். இந்நடவடிக்கையை கண்காணிப்பதற்காக 241 இராணுவப் பிரிவின் கட்டளை அதிகாரி, கல்முனை பிராந்திய இராணுவ மேஜர் சாந்த விஜயகோன், கல்முனை பிராந்திய தொற்றுநோய் தடுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் என்.ரமேஸ் ஆகியோர் குறித்த இடங்களுக்கு வருகைத் தந்து பார்வையிட்டனர்.

நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கான நடமாடும் தடுப்பூசி ஏற்றும் செயற்றிட்டமானது இராணுவத்தினரின் பங்களிப்புடன் வீட்டுக்கு வீடு வழங்கப்படவுள்ளதனால் இதுவரையிலும் கொவிட் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாத 60 வயதிற்கு மேற்பட்டோர் அனைவரும் உடனடியாக தங்களின் விபரங்களை தமக்குரிய கிராமசேவகரிடம் வழங்குவதன்மூலம் இச்சேவையை விரைவாக பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளதாக நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் பறூசா நக்பர் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் நிலைமையறிந்து கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும்

அங்கஜன் இராமநாதன் எம்.பி. தெரிவிப்பு

(சாவகச்சேரி நிருபர்)

பிள்ளைகள் பெற்றோரின் வருமானத்தை அறிந்து அதற்கேற்றாற்போல் தமது ஆசைகளை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும். அதேபோன்று அரசாங்கத்தின் தற்போதைய நிலைமை அறிந்து நாட்டுமக்கள் கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும் - என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அண்மையில் இடம்பெற்ற இணையவழி உரையாடலின்போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் தெரிவிக்கையில்;

நாட்டை முடக்குமாறு பலர் கோரிக்கை விடுத்தனர். அதில் ஒருசில நியாயங்கள் உள்ளன. மறுபுறம் நாட்டை முடக்குவதால் பொருளாதார ரீதியாக சிக்கல்கள் ஏற்படுகின்றன. நாளாந்தம் உழைத்து வாழ்பவர்கள் பல சவால்களுக்கு முகங்கொடுக்கின்றனர். கடந்த காலகட்டத்தில் நாட்டில் நீண்ட முடக்கம் ஏற்பட்ட போது இரண்டு தடவைகள் 5ஆயிரம் ரூபா கொடுப்பனவு, புதுவருடக் கொடுப்பனவு ஆகியன வழங்கப்பட்டன.

இம்முறையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்யவேண்டும் என்ற ஆசை இருந்தாலும் நாட்டின் பொருளாதார நிலைமை அதற்கு தடை போடுகின்றது. எந்த காலகட்டத்திலும் சந்திக்காத

மிகப்பெரிய சவால் தற்போது நாட்டுக்கு ஏற்பட்டுள்ளது. சுற்றுலாத்துறை வருமானம் உள்ளிட்ட திறைசேரிக்கு கிடைக்கும் பல வருமானங்கள் கொரோனா நிலைமையால் தடைப்பட்டுள்ளன.

வருமானங்களன்றி மக்களின் பிரச்சினை களையும் பார்க்கவேண்டும் அதேசமயம், நாட்டையும் முன்னே கொண்டுசெல்ல வேண்டும். யுத்தத்தை விட மிகப்பெரிய சவாலை சந்தித்துக்கொண்டிருக்கிறோம். சவால்களின் மத்தியிலும் சிறப்பான மக்களை மையப்படுத்திய அரசியல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. சவால்களுக்கு மத்தியிலும் தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டம், 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு ஆகியன சிறப்பாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

யாழ். மாவட்டத்திலுள்ள இரண்டு இலட்சம் குடும்பங்களில் 57ஆயிரம் குடும்பங்கள் 2ஆயிரம் ரூபா பெறத் தகுதியுடையனவாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

அனுராதபுரத்தில் விபசார விடுதி சுற்றிவளைப்பு

உரிமையாளர் உள்ளிட்ட இருவர் கைது

(அனுராதபுரம் நிருபர்)

அனுராதபுரம் பிரதேசத்தில் விபசார விடுதியொன்றின் மீது குற்றத்தடுப்புப் பிரிவினரால் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது அந்த விடுதியின் உரிமையாளரும் பெண் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அனுராதபுரம் குற்றத்தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய மிஹிந்தலை பொலிஸ் பிரிவின் கன்னட்டிய பகுதியில் இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன், குறித்த விடுதியிலிருந்து இவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மிஹிந்தலை மற்றும் சீப்புக்குளம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 44 மற்றும் 33 வயதுடையவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தங்குமிட வசதிகளை வழங்கும் விடுதி என்ற போர்வையில் இந்த விபசார விடுதி மிக நீண்ட காலமாக நடத்தப்பட்டு வந்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilannews@yahoo.com/ thamilaneditor@gmail.com
2021, ஓகஸ்ட் 27ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

பாவம் தலிபான் மக்கள்!

உலக நாடுகள் அனைத்தும் ஆப்கானிஸ்தானை கவனித்துக் கொண்டிருக்கின்றன. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கூட இது குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது.

மறுபக்கம், அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் தற்போது ஆசிய நாடுகளான சிங்கப்பூர், வியட்நாம் உள்ளிட்ட நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். ஆசிய நாடுகளிடையே நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையிலும், உறவைப் பலப்படுத்தும் வகையிலும் இவரின் இந்தப் பயணம் அமைந்துள்ளது. முக்கியமாக ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் வெற்றி காரணமாக அமெரிக்கா மீதான நம்பிக்கையை பல்வேறு நாடுகள் இழந்துள்ளன.

தலிபான்களின் வெற்றி ஒருவகையில் சீனா, ரஷ்யாவின் வெற்றியாக பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக ஆசிய நாடுகளிடையே நட்பை பலப்படுத்தும் வகையிலும் உறவைப் புதுப்பிக்கும் வகையிலும் கமலா ஹாரிஸின் இந்தத் திடீர் பயணம் அமைந்துள்ளது. உலக அரசியல் பெரியளவில் மாறிவரும் நிலையில், கமலா ஹாரிஸின் பயணம் முக்கியத்துவம் பெறுகிறது.

கடந்த சில வாரங்களாக சர்வதேச அளவில் ஒலித்துக்கொண்டிருக்கும் சொற்கள் ஆப்கானிஸ்தான், தலிபான், காபூல் விமான நிலையம். ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றி வாரத்திற்கு மேலாகிறது.

ஆப்கானிஸ்தானில் 20 ஆண்டுகளாக பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுவந்த அமெரிக்காவின் நேட்டோ கூட்டுப்படைகள் வேகமாக வெளியேற்றப்பட்டதன் விளைவு, யாரும் கணிக்க முடியாதவாறு ஒரே வாரத்தில் ஆப்கானைத் தலிபான்கள் கைப்பற்றினார்கள்.

ஓகஸ்ட் 15ஆம் திகதி ஆப்கான் ஜனாதிபதி அஷ்ரப் கனி, ஐக்கிய அரபு அமீரகத்திற்கு தப்பிச் சென்றவுடன் அன்றைய இரவே ஜனாதிபதி மாளிகைக்குள் புகுந்த தலிபான்கள் வெளியிட்ட காணொளியால் ஆப்கான் நாட்டினர் மட்டுமன்றி உலக மக்கள் அனைவரும் சற்று அதிர்ந்துதான் போனார்கள்.

அமெரிக்க கட்டமைப்பில் ஆப்கானிஸ்தான் மக்கள் எந்தவித பலனையும் அனுபவிக்கவில்லை என்றாலும், தலிபான்களின் பிடியில் தற்போது நாடு சிக்கியுள்ளதால் மேலும் அவர்கள் 20 ஆண்டுகள் பின்நோக்கி கொண்டுசெல்லப்படுவார்கள் என்று அந்நாட்டு மக்கள் அச்சமடைந்துள்ளனர். இதனால் பெண்கள் உட்பட அந்நாட்டு மக்களின் எதிர்காலம் எவ்வாறு அமையும் என்ற பதற்றம் எழுந்துள்ளது. இந்த அச்சம் அண்டைநாட்டின் பாதுகாப்பிலும் எதிரொலிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஒருவர் தன் உயிரைப் பாதுகாத்துக்கொள்ள எந்த எல்லைக்கும் செல்வார் என்பதற்கு உதாரணமாக காபூல் விமான நிலைய சம்பவங்களை சுட்டிக்காட்டினால் மறுப்பவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள்.

தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றிய அடுத்த நாளான ஓகஸ்ட் 16ஆம் திகதி காபூல் விமான நிலையத்தில் நடந்த சம்பவங்களைக் கண்டு உலக மக்கள் கலங்கிப்போனார்கள். முந்தைய ஆப்கான் அரசுக்கு ஆதரவாக செயற்பட்டவர்களை தலிபான்கள் தேடிக் கொல்வார்கள் என்ற உளவுத்துறையின் எச்சரிக்கையும், தலிபான்களால் இனி சுதந்திரம் பறிபோகும் என்ற அச்சத்திற்கு மத்தியில் வெளிநாடுகளுக்கு தப்பிச்செல்ல காபூல் விமான நிலையத்தில் ஆயிரக்கணக்கானோர் குவிந்தனர்.

விமான நிலையத்தில் குவிந்தவர்கள் யாரும் இந்த நாட்டுக்குத்தான் போக வேண்டும் என நினைக்கவில்லை. எந்த விமானத்தில் இடம் கிடைக்கின்றதோ அந்த நாட்டுக்குச் சென்று உயிர் பிழைத்தால் போதும் என்ற மனநிலைக்கு தள்ளப்பட்டனர்.

குழந்தைகள், பெண்களுடன் விமான நிலையத்தில் குவிந்த ஆப்கானியர்கள் எந்த விமானம் தரையிறங்கினாலும் அதில் முண்டியடித்து ஏறினர். கூட்ட நெரிசலில் சிக்கிய பலர் தங்கள் உயிரைப் பலி கொடுத்தனர். மேலும் சிலர், அமெரிக்க நாட்டினரை மீட்டுச்சென்ற விமானப் படையின் விமானத்தின் இறக்கையில் அமர்ந்து பயணம் செய்ய துணிந்ததன் விளைவு, வானிலிருந்து கீழே விழுந்து உயிரைப் பலி கொடுத்தனர்.

விமான நிலையங்களைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த அமெரிக்கப் படையினர் கூட்டத்தைக் கட்டுப்படுத்த துப்பாக்கிச்சூடு நடத்தியதில் 5 பேர் பலியாகினர். இதையடுத்து ஆப்கான் வான்வழி எல்லைக்குத் தடை விதிக்கப்பட்டு, விமான சேவைகள் நிறுத்தப்பட்டன. காபூல் விமான நிலையங்களில் நடந்த சம்பவங்களில் 50 பேருக்கு மேல் பலியாகியிருக்கலாம் என தலிபான் தளபதி ஒருவர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

இதையடுத்து, தங்கள் நாட்டு மக்களை மீட்க அனைத்து அரசுகளும் வியூகங்கள் வகுத்து சிறப்பு அனுமதியுடன் தங்களின் விமானப்படை மூலம் நாட்டு மக்களை தாயகம் அழைத்துக்கொண்டு சென்றுள்ளனர்.

இதற்கிடையே, செய்தியாளர்கள் சந்திப்பை நடத்திய தலிபான் தலைவர்கள், ஆப்கானில் முந்தைய தலிபான்களின் ஆட்சியைப்போல் இல்லாமல் இஸ்லாம் சட்டத்தின் அடிப்படையில் பெண்கள் பாடசாலை, கல்லூரி, அலுவலகங்களுக்கு செல்ல அனுமதிக்கப்படுவார்கள் எனவும் பாலின பாகுபாடு காட்டப்பட மாட்டாது எனவும் தெரிவித்தனர். மேலும், முந்தைய அரசுக்கு ஆதரவாக செயற்பட்ட அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்படுவதாக அறிவித்தனர்.

ஆனால், பல்வேறு நாடுகளின் உளவுப்பிரிவுகள் ஐ.நாவிடம் அளித்த அறிக்கையில், ஆப்கான் இராணுவம், காவல்துறை, புலனாய்வுத்துறையில் பணியாற்றியவர்கள் மற்றும் அரசுக்கு ஆதரவாக செயற்பட்டவர்களின் வீடுகளுக்குச் சென்று தலிபான்கள் கைதுசெய்து வருவதாகவும், அவர்கள் வீட்டில் இல்லையெனில் உறவினர்களை கைதுசெய்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

மேலும், ஆப்கானிஸ்தானில் டொய்ச் வெல்லே நிறுவனத்தில் பணிபுரிந்த பத்திரிகையாளரை தேடிச்சென்ற தலிபான்கள், அவரது உறவினரை சுட்டுக் கொன்றதாக ஜேர்மன் ஒளிபரப்பு நிறுவனம் குற்றஞ்சாட்டியுள்ளது.

ஆப்கானிஸ்தானின் ஹெராட் மாகாணத்தில், இருபாலரும் இணைந்து கல்வி கற்பதற்கு தலிபான்கள் தடை விதித்தது, அவர்களது வாக்குறுதியை மீறியதற்கான சான்றாக அமைந்துள்ளது.

இந்நிலையில், ஆப்கானைவிட்டு வெளியேறுவதற்கு கடைசி நாளாக ஓகஸ்ட் 31ஐ அமெரிக்கா நிர்ணயித்துள்ள நிலையில், அதற்குள் அனைத்து போராட்டக் குழுவினரும் அடங்கிய புதிய அரசை உருவாக்குவதில் தலிபான் அமைப்பின் இணை நிறுவனர் முல்லா அப்துல் கனி பராதர் பல்வேறு தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்திவருகிறார்.

மறுபக்கம், ஆப்கான் நாட்டு பெண்களும், சமூக ஆர்வலர்களும் தலிபான்களின் பிற்போக்குத்தன்மை அரசுக்கு எதிராக தெருக்களில் இறங்கி ஆப்கான் கொடியுடன் போராட்டம் நடத்திவருகின்றனர். அதேபோல், அமெரிக்காவின் வெள்ளை மாளிகை, டென்மார்க், தென் கொரியா, பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெயின் உள்ளிட்ட நாடுகளில் தலிபான்களுக்கு எதிராக தெருக்களில் இறங்கி மக்கள் போராடி வருகின்றனர்.

வெளிநாடுகளில் வாழும் ஆப்கான் மக்களோ, தங்கள் நாட்டுக்குச் செல்ல அஞ்சி அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளின் தூதரகங்களுக்கு சென்று விஸா கோரி விண்ணப்பித்து வருகின்றனர். சீனா, பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகள் தலிபான்கள் அரசுக்கு ஆதரவு தெரிவித்தாலும், பிற ஆசிய நாடுகளான பங்களாதேஷ், இந்தியா உள்ளிட்டவை தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்துள்ளன. இலங்கையோ பட்டும் படாமல் தனது நிலைப்பாட்டை அறிவித்துள்ளது.

யார் ஆட்சியை நடத்தினாலும், வயிற்றுக்கு உழைத்துப் பிழைக்கத்தான் வேண்டும் என்பதால் காபூல் போன்ற பெருநகரங்களில் மீண்டும் பணிகளும் திரும்பத் தொடங்கியுள்ளன. அங்கே வெட்டுவோம் பிடுங்குவோம் என்று கூறிய அமெரிக்கா ஒன்றுமே நடக்காததுபோல் செயற்படுகிறது.

வெளியுலகை நம்பிய அந்நாட்டு மக்கள் இறுதியில் வெளியுலகமும் இல்லாமல், உள்நாட்டு வாழ்வாதாரங்களையும் இழந்து நடுத்தெருவுக்கு வந்துள்ளனர். எப்போதுமே அரசியலும் பணபலமும், சர்வாதிகாரமும் முன்னோக்கி சென்றுகொண்டிருக்கின்றன.

உலகில் புதிய அகதிகள் உருவாக்கம்

ஆப்கானிஸ்தான் மக்களை தலிபான்களின் பிடியிலிருந்து விடுவித்த அமெரிக்காவும் அதனது நேச நாடுகளும் இருபது வருடங்களின் பின்னர் அவர்கள் அகதிகளாவார்கள் என கனவிலும் நினைத்திருக்க மாட்டார்கள். அந்த அகதிகளையும் அழைத்துக்கொண்டு தாமும் வெளியேறப்போவதை அவர்கள் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

ஆப்கான் மக்களுக்கு உதவி செய்ய புறப்பட்ட உலகின் வல்லரசுகளை உள்ளடக்கிய படை அங்கிருந்து வெளியேற வேண்டிய துன்பியல் நிகழ்வு நடந்துள்ளது. ஆப்கானிலிருந்து முப்பது நிமிடங்களுக்கு ஒரு விமானம் புறப்படுவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. எமக்கொரு நாடு இருக்கிறதென நெஞ்சை நிமிர்த்தி வாழ்ந்த ஆப்கான் மக்கள் அகதிகளாக வெளியேற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

காபூல் விமான நிலையத்திலிருந்து கடந்த 21 ஆம் திகதி அதிகபட்சமாக 21,600 பேர் வெளியேற்றப்பட்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. 37 அமெரிக்க விமானங்களின் மூலம் 12,700 பேரும், நட்பு நாட்டு விமானங்களின் மூலம் 8,900 பேரும் 24 மணிநேரத்தில் வெளியேற்றப்பட்டனர்.

ஓகஸ்ட் 14 அன்று ஆப்கானிஸ்தான் தலைநகரை தலிபான்கள் கைப்பற்றியதிலிருந்து, வரலாற்றில் மிகப்பெரிய அமெரிக்க விமானப் போக்குவரத்து வெளியேற்றத்தில் ஆப்கானிஸ்தானிலிருந்து 70 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் வெளியேற்றப்பட்டனர். சமீபத்திய நாட்களில் வேகம் அதிகரித்தாலும், மக்கள் தப்பிக்க முற்படுவதால் அது இன்னும் குழப்பமான போராட்டமாக மாறியுள்ளது. ஆப்கானிஸ்தான், காபூல் விமான நிலையத்தை அடைய முயலும் மக்கள் அபாயத்தை எதிர்கொள்கின்றனர். அதைவிட வெளியேற விரும்புவோர் தொகை அதிகம். அமெரிக்காவில் அல்லது வேறு எங்காவது மீள்குடியேற்றத்தின் பல சவால்களை அவர்கள் எதிர்கொள்வார்கள் என ஏபி செய்தி தெரிவித்துள்ளது.

வெளியேற்றப்பட்ட 70,000 பேரில் 4,000இற்கும் மேற்பட்ட அமெரிக்க குடிமக்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் குறைந்த எண்ணிக்கையிலான சிறப்பு புலம்பெயர்ந்த விஸா பெற்ற ஆப்கானியர்கள் அடங்குவர், அமெரிக்காவுக்கும் நேட்டோ படைகளுக்கும் மொழிபெயர்ப்பாளர்களாக அல்லது வேறு வகையில் பணியாற்றியவர்களும் ஆப்கானை விட்டு வெளியேற முடிவு செய்துள்ளனர். அவர்கள் குடும்பத்துடன் உடனடி விஸாவுக்கு விண்ணப்பித்துள்ளனர். அரசாங்கத்துக்காக பணியாற்றியவர்கள், சிவில் சமூக உறுப்பினர்கள், பத்திரிகையாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் ஆகியோரும் அடங்குவர்.

அமெரிக்க குடிமக்களும் ஏற்கனவே சட்டப்பூர்வ அமெரிக்க குடியுரிமை பெற்றவர்களும், சிறப்பு குடியேற்ற விஸாவுக்கு ஒப்புதல் பெற்றவர்கள் பொதுவாக கட்டார் அல்லது மற்றொரு வளைகுடா நாட்டில் நிறுத்தப்பட்டு தங்கவைக்கப்படுவார்கள். பிறகு அமெரிக்கா செல்லலாம். ஆப்கானிஸ்தானிலிருந்து அகதிகளாக வெளியேறுபவர்கள் மீள் குடியேற்றம் செய்யப்படும்வரை தற்காலிகமாக உகண்டா, ருவண்டா, கோஸ்டாரிகா, அல்பேனியா உட்பட 13 நாடுகளில் தங்க வைக்கப்படுவார்கள். உள் நாட்டுப்போர், இனப்பிரச்சினை, கலவரம் ஆகியவற்றின்போது அகதிகளை அழைத்துச் சென்ற வரலாறு உள்ளது.

வியட்நாம் போரின் முடிவில் 1975இல் சைகோனின் வீழ்ச்சியுடன் சுமார் 7,000 பேரை அமெரிக்கா விமானத்தில் ஏற்றியது, இறுதியில் தென்கிழக்காசியாவிலிருந்து 1,00,000இற்கும் அதிகமான அகதிகளை அழைத்துச் சென்றது. 1996ஆம் ஆண்டில், அப்போதைய ஜனாதிபதி சதாம் ஹுசேனின் கட்டுப்பாட்டை மீட்டெடுத்த பிறகு, வடக்கு ஈராக்கிலிருந்து சுமார் 5,000 குர்துகள் மற்றும் பிற ஈராக் சிறுபான்மையினரை அமெரிக்கா வெளியேற்றியது.

1999ஆம் ஆண்டில், கொசோவோ மாகாணத்தில் அல்பேனியர்களுக்கு எதிரான யூகோஸ்லாவியன் இனச் சுத்திகரிப்பால் பாதிக்கப்பட்ட சுமார் 20,000 பேர் அமெரிக்காவிற்கு அகதிகளாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

சர்வதேச மீட்புக் குழு மற்றும் கத்தோலிக்க ஆயர்களின் அமெரிக்க மாநாடு உட்பட ஒன்பது இலாப நோக்கமற்ற மீள்குடியேற்ற முகாம் அகதிகளுக்கு உதவ வேலை செய்யும் இணைப்பின் வலையமைப்பை மேற்பார்வையிடுகின்றன. அவர்கள் புதிய நகரங்களில் வைக்கப்பட்ட பின் 90 நாட்களுக்கு உணவு மற்றும் வீட்டுவசதி உதவியைப் பெறுகிறார்கள், ஆனால், தன்னிறைவு பெறுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்மனி ஆகிய நாடுகள் ஆப்கான் மக்களை அழைத்துச் செல்வதில் முனைப்புக் காட்டுகின்றன. விமான நிலையத்தில் கட்டுப்பாடுகள் அதிகமாக உள்ளன. விஸா இல்லாதவர்கள் உள்ளே செல்ல முடியாது. விமான நிலையத்தை முற்றுகையிட்டுள்ள தலிபான்கள் அடிக்கடி துப்பாக்கிப் பிரயோகம் செய்கிறார்கள். விசாரணைக்கென சிலரை கூட்டிச்செல்கிறார்கள்.

கால் நடையாக எல்லையைத் தாண்ட பல ஆப்கானிஸ்தான்கள் முயற்சி செய்கிறார்கள். அதிகமானோர் பாகிஸ்தானின் எல்லையில் குழுமியுள்ளனர். எத்தனை இலட்சம் அகதிகள் ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறினார்கள் என்ற விபரம் உடனடியாகத் தெரியவில்லை.

ரமணி

வவுனியாவில் செய்யப்பட்ட எழுமாற்று பரிசோதனையில் புதிதாக 177 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் மேலும் 177 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனா தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்பைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று வெளியாகின. அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொவிட் தொற்று பரவியுள்ள நிலையில் 177 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், தொற்றாளர்களை கொவிட் சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பி வைப்பதற்கும் அவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

குளவிக்கொட்டுக்கு இலக்காகி ஒருவர் பலி

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹொலிரூட் தோட்டத்தில் நேற்று முன்தினம் குளவிக்கொட்டுக்கு இலக்காகி நபரொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விறகு வெட்டுவதற்காக நேற்றுமுன்தினம் நால்வர் குறித்த பிரதேசத்துக்குச் சென்றுள்ள நிலையில் குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளனர். அதன்பின்னர் அந்த பிரதேச மக்கள் ஒன்றிணைந்து அவர்கள் நால்வரையும் லிந்துல மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் அவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஹொலிரூட் தோட்டம், தலவாக்கலை பிரதேசத்தைச் சேர்ந்த 89 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சடலம் லிந்துல மாவட்ட வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், தலவாக்கலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மரணச்சடங்கில் கலந்துகொண்ட மூவருக்கு கொரோனா தொற்று!

நயினாதீவில் கடந்த திங்கட்கிழமை உயிரிழந்த வயோதிபப் பெண்ணின் மரணச்சடங்கில் கலந்துகொண்ட மூவருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. இவர் திடீரென ஏற்பட்ட சுகயீனம் காரணமாக உயிரிழந்துள்ளார். அவரது மரணச்சடங்கில் பலர் கலந்துகொண்டுள்ள நிலையில், ஓரிரு நாட்களின் பின்னர் உயிரிழந்தவரின் சகோதரி உள்ளிட்ட சிலர் திடீரென சுகயீனமடைந்துள்ளனர்.

இதனால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர், அங்கு அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் மூவருக்கு தொற்று உறுதியாகியுள்ளது. அதனையடுத்து சுகாதாரப் பிரிவினர் மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, திடீர் சுகயீனமுற்று உயிரிழப்பவர்களின் சடலங்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளும் நடைமுறை உள்ளபோதிலும், உயிரிழந்த குறித்த வயோதிபப் பெண்ணின் சடலத்திற்கு பரிசோதனை மேற்கொள்ளப்படவில்லை எனவும், அவர் கொரோனா தொற்றினால் உயிரிழந்திருக்கலாம் எனவும், அவரின் ஊடாகவே மரணச்சடங்குக்கு சென்றவர்களுக்கு தொற்று ஏற்பட்டிருக்கலாம் எனவும் ஊரவர்கள் சந்தேகிக்கின்றனர்.

இலங்கை - அவுஸ்திரேலிய இராஜதந்திர உறவுகள் நிறுவப்பட்டு 75 வருடங்கள் நிறைவு

இருதரப்பு பரஸ்பர ஒத்துழைப்பு தொடர்பில் ஜீ.எல்.பீரிஸ் - டேவிட் ஹொலிக்கு இடையில் பேச்சு

வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸை மரியாதை நிமித்தமாக நேற்று முன்தினம் சந்தித்த அவுஸ்திரேலியாவின் உயர்ஸ்தானிகர் டேவிட் ஹொலி, அவுஸ்திரேலியாவுடன் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்கான வழிகள் குறித்து கலந்துரையாடினார்.

அவுஸ்திரேலியா தொடர்ந்தும் நல்கிய உதவியைப் பாராட்டிய வெளிநாட்டு அமைச்சர் பீரிஸ் குறிப்பாக, கடல் மார்க்கமான ஒழுங்கற்ற இடம்பெயர்வு, கொரோனாவை எதிர்த்துப் போராடுதல், கல்வி, தொழில்நுட்பம் மற்றும் தொழிற்பயிற்சி, பொருளாதார மற்றும் முதலீட்டுத் துறைகளில் அவுஸ்திரேலியாவால் ஈடுசெய்யப்பட்ட ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பு மற்றும் ஆர்வத்தை வலியுறுத்தினார்.

வெளிநாட்டு அமைச்சரின் நியமனத்திற்காக தனது பாராட்டுகளைத் தெரிவித்த உயர்ஸ்தானிகர் ஹொலி, சமூகப் பொருளாதார அபிவிருத்தி செயற்பாட்டில் இலங்கைக்கு உதவுவதற்கு அவுஸ்திரேலியா தயாராக இருப்பதாக மீண்டும் வலியுறுத்தினார்.

இந்து சமுத்திரத்தின் அண்டை நாடுகளாக இருப்பதால், எதிர்கால கடல் பேரழிவுகளைத் தடுத்தல் மற்றும் சர்வதேச மற்றும் பிராந்திய மன்றங்களிலான ஒத்துழைப்பு ஆகியவற்றில் கடல்சார் துறையில் நெருக்கமான ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை இரு தரப்பினரும் கண்டறிந்தனர்.

இலங்கை மற்றும் அவுஸ்திரேலியா இடையே இராஜதந்திர உறவுகளை நிறுவியதன் 75ஆவது ஆண்டு நிறைவை 2022ஆம் ஆண்டு கொண்டாடுவதற்கு வெளிநாட்டு அமைச்சரும் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகரும் ஒப்புக்கொண்டனர்.

வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே மற்றும் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர்.

புத்தளத்தில் 70 பேருக்கு தொற்று

(ஜூட் சமந்த)

புத்தளம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் 70 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது. அதற்கமைய, சிலாபம் பகுதியில் 06 பேருக்கும், கற்பிட்டி பிரதேசத்தில் 13 பேருக்கும், வென்னப்புவ பிரதேசத்தில் 18 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

புத்தளம் மற்றும் நுரைச்சோலை பிரதேசத்தில் 38 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். இதேவேளை, நேற்று முன்தினம் கொரோனா தொற்றுக்குள்ளான 08 பேர் உயிரிழந்துள்ளனர். புத்தளம் பிரதேசத்தில் ஒரு மரணமும் சிலாபம் பிரதேசத்தில் ஏனைய ஏழு மரணங்களும் இடம்பெற்றுள்ளன.

கொரோனா தொற்றின் காரணமாக இவர்கள் உயிரிழந்துள்ளதுடன், சிலாபம் பிரதேசத்தில் சர்வதேச பாடசாலையின் பிரதி அதிபர் ஒருவரும் உயிரிழந்துள்ளார்.

மூத்த பிரஜைகளுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுப்பு

(மன்னார் நகர் நிருபர்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் இவ்வாரம் தேசிய தடுப்பூசி வாரமாக பிரகடனப்படுத்தப்பட்ட நிலையில், நீண்டகால சுகயீனமுற்ற முதியவர்கள் மற்றும் நோயினால் பாதிக்கப்பட்ட மூத்த பிரஜைகளுக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை நேற்று வியாழக்கிழமை முதல் மன்னார் மாவட்டம் முழுவதும் இடம்பெற்று வருகின்றது.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனை இணைந்து குறித்த தடுப்பூசி செலுத்தும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

மன்னார் நகர், முசலி, நானாட்டான், மடு, மாந்தை சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் மேற்படி முன்பதிவு மேற்கொண்ட 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த பிரஜைகளுக்கு அஸ்ராசெனெக்கா தடுப்பூசிகளின் முதல் டோஸ் வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக இவ்வாரம் முழுவதும் மூத்த பிரஜைகளுக்கு அவர்களின் வீடுகளுக்கே சென்று தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே மற்றும் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்றது.

வவுனியா வைத்தியசாலையில் கொவிட் தொற்றால் பெண் ஒருவர் உயிரிழப்பு

(வவுனியா நிருபர்)

வவுனியா வைத்தியசாலையில் கொவிட் தொற்றால் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொவிட் தொற்று காரணமாக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு கொவிட் சிகிச்சை விடுதியில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் குறித்த பெண் உயிரிழந்துள்ளார்.

வவுனியா, தோணிக்கல், சேக்கிழார் வீதியைச் சேர்ந்த 71 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு மரணமடைந்தவராவார். அவரது உடலை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி அடக்கம் செய்ய சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

'மங்கள சமரவீர உண்மையான தேசபக்தர்'

எரான் விக்ரமரத்ன எம்.பி. அனுதாபம்

அமரர் மங்கள சமரவீரவை பலரும் விரும்பினர். ஆனால், ஒருசிலர் அவரை விரும்பவில்லை. அவரது தாராளவாத பார்வையில் உடன்படாத பலர் இருந்தனர். ஆனாலும், அவர்களுடனான கலந்துரையாடலை மங்கள ஏற்றுக்கொண்டார்- என நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

மங்கள உண்மையாகவே அர்த்தத்தில் ஒரு சீர்திருத்தவாதி. அரசாங்கத்திற்கு அப்பாற்பட்ட நிறுவனங்களைக் கட்டியெழுப்பவும், இலங்கையில் மக்கள் கௌரவமான வாழ்க்கை வாழ உதவுவதற்கும் அவர் தன்னை அர்ப்பணித்தார். அச்சுறுத்தல்கள் அல்லது அவரது பதவி நிலை மூலம் அல்ல, பேச்சுவார்த்தைகளின் மூலமே ஆளுமை செய்தார். அவர் நிபுணர்களைக் கேட்டு, அவருடைய தீர்ப்புக்கு எதிரான அவர்களின் ஆலோசனையை மதிப்பீடு செய்து தனது முடிவை எடுத்தவராவார். அவர் எப்பொழுதும் தான் எடுத்த முடிவுகளின் உரிமையை தன்னகத்தே கொண்டார் மற்றும் காலப்போக்கில் அதன் விளைவுகளையும் பிரதிபலித்தார். மங்கள தனது 30 ஆண்டுகால நீண்ட அரசியல் வாழ்க்கையில் பல அழிக்கமுடியாத சாதனைகளை படைத்துள்ளார்.

மங்களவுடனான எனது உறவு ஒரு தொழில்முறை உறவாகத் தொடங்கியது. ஆனால், காலப்போக்கில் அது இலங்கையைப் பற்றிய நமது பகிரப்பட்ட பார்வையின் அடிப்படையில் ஒரு சிறந்த நட்பாக வளர்ந்தது. மங்கள நாடாளுமன்றத்தை விட்டு வெளியேறியவுடன், அவருடைய பொல்கொட ஏரி வீட்டில் எங்கள் நட்பும் உரையாடலும் தொடர்ந்தன. அவர் தனது முயற்சிகள் மற்றும் அவரது எதிர்காலம் பற்றி எனக்கு விளக்கினார். அவரது பொழுதுபோக்கிற்காக அவர் விரும்பிய திறந்த வீடு, மகிழ்ச்சியான இயல்பை தெளிவாக எடுத்தியம்பியது.

மங்கள நேர்மையானவர் அனைவரையும் மதிக்கக் கூடிய மற்றும் நவீன காலத்தின் மிகவும் தைரியமான அரசியல்வாதி.

மங்கள, உங்கள் நோக்கு இழக்கப்படவில்லை. எனினும், உங்கள் நேரடி நடத்தை, உங்கள் நட்பை இழந்திடுவோம். உங்கள் அரசியல் பயணத்தில் நீங்கள் பலருக்கு அளித்துள்ள தைரியம் இலங்கையில் தொடர்ந்தும் தாக்கம் செலுத்தும் - என்று குறிப்பிட்டுள்ளார்.

மல்லவப்பிட்டியவில் 3,867 குடும்பங்களுக்கு 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கிவைப்பு

(இக்பால் அலி)

மல்லவப்பிட்டிய பிரதேச செயலகத்திலுள்ள 3 ஆயிரத்து 867 வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு 2ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் காரணமாக குருநாகல் மாவட்டத்தில் மல்லவப்பிட்டிய பிரதேச செயலகத்தில் 3 ஆயிரத்து 867 வருமானம் குறைந்த குடும்பங் களுக்கு வெற்றிகரமான முறையில் அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிதி உதவி பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றது.

மேலும், சுகாதார நடைமுறைகளைப் பேணி வீடு வீடாகச் சென்று தெனகம கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு 2ஆயிரம் ரூபா பகிர்ந்தளிக்கப்பட்டது.

ஊழியர்கள் இருவருக்கு கொரோனா; வலி. மேற்கு பிரதேச சபை முடக்கம்!

யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தலைமைக் காரியாலயத்தில் பணி புரிந்துவரும் ஊழியர்கள் இருவருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

சுழிபுரத்தில் அமைந்துள்ள குறித்த காரியாலயத்தின் ஊழியர்கள் அத்தியாவசிய தேவை கருதி சுழற்சி முறையில் பணிக்கு அழைக்கப்பட்டுவந்திருந்தனர்.

அவர்களில் இருவருக்கு தொற்று அறிகுறிகள் காணப்பட்ட நிலையில் கொவிட் பரிசோதனைக்கு உள்ளாகியிருக்கின்றனர். அவர்கள் இருவருக்கும் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களுடன் பணியாற்றிய இன்னொரு ஊழியருக்கும் நோய் அறிகுறி காணப்பட்டுள்ள நிலையில் பரிசோதனைக்கு சென்றுள்ளனர். இந்நிலையில், எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை பணிமனையை தற்காலிகமாக மூடி அனைத்து ஊழியர்களுக்கும் பரிசோதனைகள் மேற்கொண்ட பின்னரே அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து தீர்மானிக்கப்படும் என்று பிரதேச சபை தவிசாளர் நடனேந்திரன் தெரிவித்தார்.

இரண்டரை கோடி ரூபாவை பகிர்ந்தளித்த வர்த்தகர்

களனி பிரதேசத்தைச் சேர்ந்த சீ. மஞ்சுள பெரேரா என்றழைக்கப்படும் வர்த்தகர், தனிமைப்படுத்தல் ஊரடங்கினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இரண்டரை கோடி ரூபா பணத்தை பகிர்ந்தளித்துள்ளார்.

ஹுணுப்பிட்டி, நாஹேன பிரதேசத்திலுள்ள மக்களுக்கே இவர் இத்தொகையை 1000 ரூபா வீதம் பகிர்ந்தளித்துள்ளார்.

அமோனியா நைட்ரேட் உள்ளிட்ட பெருந்தொகை வெடிபொருட்களுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது

மாத்தறை மற்றும் கந்தர பொலிஸ் பிரிவுகளில் அதிக சக்திவாய்ந்த வெடிபொருட்களான அமோனியா நைட்ரேட், ஜெலிட் நைட் குச்சிகள் உள்ளிட்ட பெருந்தொகை வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படை தென் மாகாண விசேட சுற்றிவளைப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டதாக விசேட அதிரடிப்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

கல்லுடைத்தல் என்ற போர்வையில் இந்த வெடிபொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாக அதிரடிப்படை அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளுக்காக கைப்பற்றப்பட்ட வெடிபொருட்கள் மற்றும் சந்தேகநபர்கள் மாத்தறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

பாண்டிருப்பில் 28 பேரிடம் எழுமாறாக மேற்கொண்ட அன்ரிஜன் பரிசோதனையில் ஐவருக்கு கொரோனா

(பாண்டிருப்பு நிருபர்)

கல்முனை வடக்கு பிராந்திய சுகாதாரப் பணிமனைக்குட்பட்ட பாண்டிருப்பு கிராமத்தின் செல்லப்பர் தோட்டம் பகுதியில் நேற்று 28 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் 5 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளதாக கல்முனை வடக்கு பிராந்திய சுகாதாரப் பணிமனை தெரிவித்துள்ளது.

கல்முனை வடக்கு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஆர்.கணேஸ்வரன் தலைமையிலான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுவினர் பிரதேசத்தில் கொரோனா தொற்றைக் கண்டறிவதற்கான அன்ரிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர். தற்போதைய பொது முடக்கத்தையும் கருத்திற்கொள்ளாது வீதிகளில் நடமாடுபவர்கள், ஏற்கனவே கொரோனா நோயாளர்களுடன் தொடர்புபட்டவர்கள், சுயதனிமைப்படுத்தலில் உள்ளவர்கள் என பலதரப்பட்டவர்களுக்கும் அன்ரிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது.

இதற்கமைய பாண்டிருப்பு செல்லப்பர் தோட்டம் பகுதியிலுள்ள சிலருக்கு எழுமாறாக அன்ரிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது 5 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டது. இதனையடுத்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் குறித்த நபர்கள் தங்கியுள்ள வீடுகளுக்கு சென்று 14 நாட்கள் சுயதனிமைப்படுத்தலுக்கான அறிவித்தல் பிரசுரத்தைக் காட்சிப்படுத்தினார்கள்.

கொவிட் ஜனாஸாக்களை அடக்கம்செய்ய குறிஞ்சாக்கேணி – வட்டமடு பிரதேசம் தெரிவு

(சீனாக்குடா நிருபர்)

கொரோனா தொற்றினால் மரணமடையும் ஜனாஸாக்களை அடக்குவதற்காக கிண்ணியா பிரதேசத்தில் அடையாளப்படுத்தப்பட்ட இடம் நேற்று செப்பனிடப்பட்டது.

இந்த இடம் கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட குறிஞ்சாக்கேணி சுகாதாரப் பிரிவில் வட்டமடு கிராமத்தில் அமைந்துள்ளது.

கிண்ணியா பிரதேச செயலாளர் ஏ.எம்.அனஸ், கிண்ணியா பிரதேச சபை தவிசாளர் முகம்மது நிகார், கிண்ணியா இராணுவப் படை அதிகாரி மேஜர் திஸ்ஸநாயக்க ஆகியோர் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

கொரோனா தொற்றினால் உயிரிழப்போரின் ஜனாஸாக்கள் இதுவரை ஓட்டமாவடி மஜ்மா நகரில் அடக்கம் செய்யப்பட்டு வந்தது. எனினும், அங்கு ஜனாஸாக்களை அடக்கம் செய்ய முடியாதளவுக்கு இடநெருக்கடி ஏற்பட்டதனால் கிண்ணியாவில் குறித்த இடம் தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அம்பாறை மாவட்டத்தில் நுகர்வோர் அதிகாரசபையினர் திடீர் சுற்றிவளைப்பு

(ஐ.எல்.எம் நாஸிம்)

அம்பாறை மாவட்ட நுகர்வோர் அதிகாரசபையினரால் சம்மாந்துறை, நிந்தவூர், பாலமுனை, அட்டாளைச்சேனை பிரதேசங்களிலுள்ள அரிசி ஆலைகள், வர்த்தக நிலையங்கள் மீது திடீர் சுற்றிவளைப்பு நேற்று முன்தினம் அம்பாறை மாவட்ட நுகர்வோர் அதிகாரசபையினரால் மேற்கொள்ளப்பட்டது.

பொருட்களை விற்பனைசெய்யும்போது நுகர்வோருக்கு நிபந்தனை விதிப்பது, மேலதிக கட்டணங்கள் அறவிடுவது, பொருட்களை பதுக்கிவைப்பது தொடர்பில் பொதுமக்களால் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதையடுத்து அம்பாறை மாவட்ட நுகர்வோர் அதிகாரசபையின் மாவட்ட பொறுப்பதிகாரி சாலிந்த பண்டார நவரத்ன தலைமையிலான குழுவினரால் குறித்த திடீர் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது வியாபார நிலையங்களுக்கு எச்சரிக்கை அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன், மேலும் ஒருசில வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக அம்பாறை மாவட்ட நுகர்வோர் அதிகாரசபையின் மாவட்ட பொறுப்பதிகாரி சாலிந்த பண்டார நவரத்ன தெரிவித்தார்.

கிண்ணியாவில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டோருக்கு இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கிவைப்பு

(அப்துல்சலாம் யாசீம்)

நாட்டில் அமுலாக்கப்பட்ட தனிமைப்படுத்தல் ஊரடங்கினால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட ஒருதொகுதி மக்களுக்கு 2000 ரூபா வீதம் அரசால் வழங்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 31 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கான கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது. கிண்ணியா பிரதேசத்திற்குட்பட்ட சம்மாவச்சதீவு கிராம உத்தியோகத்தர் பிரிவிலிருந்து 2000 ரூபா கொடுப்பனவைப் பெற 199 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் - என கிராம உத்தியோகத்தர் எப்.எம்.ஜவாஹிர் தெரிவித்தார்.

அவர்களுக்கான கொடுப்பனவு நேற்று முன்தினம் புதன்கிழமை கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.ஏ.எம்.அனஸினால் சம்மாவச்சதீவு கிராம உத்தியோகத்தர் பிரிவில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது. கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.ஏ.எம்.அனஸ் அக்கொடுப்பனவை வழங்கினார்.

சம்மாவச்சதீவு பிரிவு கிராம உத்தியோகத்தர் எவ்.எம்.ஜவாஹிர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ரீ.பைரோஸ், சமுர்த்தி உத்தியோகத்தர் ஏ.பயாஸ் அலி மற்றும் முன்னாள் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சஹ்ஜீர் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

சம்மாவச்சதீவு கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் தொடர்ச்சியாக அக்கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது. அரச உதவி எதனையும் பெறாத குறைந்த வருமானம் பெறும் வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களுக்கு இக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

அரச உத்தியோகத்தரைக்கொண்ட குடும்பம், ஓய்வூதியம் பெறும் குடும்பம், சமுர்த்தி உதவி பெறும் குடும்பம், முதியோர் கொடுப்பனவு பெறும் குடும்பம், அங்கவீன உதவிபெறும் குடும்பம் போன்ற அரச உதவியைப் பெறும் குடும்பங்களுக்கு இவ்வுதவித்தொகை வழங்கப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

கர்ப்பிணித் தாய்மார் - 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு அட்டாளைச்சேனையில் தடுப்பூசி வழங்கிவைப்பு

(அட்டாளைச்சேனை)

அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார காரியாலயப் பிரிவில் கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கான முதலாம், இரண்டாம் கட்ட கொவிட் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் நேற்றுக் காலை 8 மணிமுதல் பகல் 12 மணிவரை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.அகிலன் தலைமையில் இடம்பெற்றது.

முதலாவது தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாதவர்கள் நேற்றைய தினம் தடுப்பூசி ஏற்றும் நிலையங்களுக்குச் சமுகமளித்து தடுப்பூசி ஏற்றிக்கொண்டனர்.

தீகவாபி சுகாதார நிலையம், ஒலுவில் வெளிச்ச வீடு சுகாதார நிலையம், பாலமுனை உதுமாபுரம் சுகாதார நிலையம், அட்டாளைச்சேனை மத்திய மகா வித்தியாலயம், அட்டாளைச்சேனை மாவட்ட வைத்தியசாலை, பிரதேச சுகாதார வைத்திய காரியாலயம் ஆகிய இடங்களில் தடுப்பூசி ஏற்றும் பணிகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

மரக்கறிகளுடன் சென்ற கெப் வாகனம் நிலாவெளியில் சில்லு கழன்று விபத்து

(கந்தளாய் நிருபர்)

நிலாவெளியிலிருந்து புல்மோட்டையை நோக்கி மரக்கறிகளுடன் சென்ற கெப் வாகனம் நிலாவெளி 04ஆம் கட்டையில் சில்லு கழன்று விபத்துக்குள்ளானது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை நிலாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கெப் வாகனத்தின் சாரதி காயங்களுக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகின்றது. அதிக வேகமே விபத்துக் குக் காரணம் எனத் தெரிவிக் கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நிலாவெளி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

நன்னீர் மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு வள்ளங்கள் கையளிப்பு

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தில் நன்னீர் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுள்ள கடந்த காலங்களில் யானைகளின் தாக்கம் காரணமாக சேதமடைந்த வள்ளங்களின் உரிமையாளர்கள் மற்றும் வள்ளமொன்றை பெற பொருளாதார வசதியற்ற தெரிவுசெய்யப்பட்ட 07 பயனாளிகளுக்கான வள்ளங்கள் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவருமான கபில நுவன் அத்துகோரளவினால் மாவட்ட செயலகத்தில் வைத்து நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

வள்ளமொன்றை கொள்வனவுசெய்ய 55ஆயிரம் ரூபா அரசாங்கத்திற்கு செலவாகியுள்ளது.

இக்கட்டான நிலையில் மீனவத் தொழிலை மேற்கொள்வோருக்கு உரிய வள்ளங்களை வழங்க முன்வந்தமை குறித்து அரசாங்கத்திற்கு நன்றிகளை இதன்போது பயனாளிகள் தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோரள, மொரவெவ பிரதேச சபை தவிசாளர், இலங்கை தேசிய நீர் உயிரின வளங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் மாவட்ட உத்தியோகத்தர் ஏ.பி.அத்தாவுட உட்பட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

அதிகாரத்தை விட அறிவியல் முடிவுகளே கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த உதவும்

மட்டு. மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன்

(வீரமுனை நிருபர்)

கொவிட் தொற்றுத் தாக்கத்திலிருந்து மக்களைப் பாதுகாக்கவேண்டுமாயின் அறிவியல்பூர்வ விஞ்ஞானச் சிந்தனையும் ஆலோசனையுமே இப்போதைய தேவையாகும். ஆகவே, அகில இலங்கை வைத்திய அதிகாரிகளின் புலமைசார் நிபுணத்துவ ஆலோசனைகளுக்குச் செவிசாய்க்க வேண்டும். எடுத்தோம், கவிழ்த்தோம் என்ற பாணியில் அரசியல் தேவைப்படி கொவிட் தாக்கத்தை அணுகமுடியாது - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டு. மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் கூறுகையில்,

அரசியல் அதிகாரத்தின் மூலமாக கொரோனா வைக் கட்டுப்படுத்த முடியாது. அதிகாரங்கள், அறிவியலைக் கட்டுப்படுத்துமாயின் அது மக்களுக்கு ஆபத்தாகிவிடும். மக்கள் உயிரா? ஆட்சியாளர்களின் அதிகாரமா? என்ற தேர்வில் முன்னுரிமைப்படுத்தவேண்டியது மக்களின் உயிராகும்.

மக்களின் உயிர்களைக் காப்பாற்றக்கூடிய அறிவியல் நுட்பம், அக்கறை, நிபுணத்துவம், அர்ப்பணிப்பு அத்துறைசார் வைத்தியர்களிடமும் ஏனைய சுகாதாரத்துறை சார்ந்தவர்களிடமுமே காணப்படுகிறது. வைத்திய அதிகாரிகளின் கருத்தைக் கேட்டு ஏற்கனவே நடந்திருந்தால் கொவிட் மரண எண்ணிக்கை, நோயாளர்களின் எண்ணிக்கை என்பவற்றைக் குறைத்திருக்கலாம். அதனை அரசியல் தலைவர்கள், அமைச்சர்கள் கேட்கின்ற தன்மை கடந்த காலங்களில் குறைவாகவே இருந்தது. அதனால்தான் கொவிட்டின் மூன்றாம் அலைத்தாக்கத்தில் அதிகமான மக்கள் உயிர்களை இழந்துள்ளனர். பெறுமதியானவர்களை, பெறுமதியான உயிர்களை அரசியல் அதிகாரங் களால் மீட்கமுடியாது.

இந்நிலையில், நாட்டை ஆறு வாரங்களுக்கு முடக்கவேண்டும், 10 நாட்கள் முடக்கினால் போதாது என்று வைத்திய அதிகாரிகள் சங்கம் கூறுகிறது. இதற்கு அரசு செவிசாய்க்க வேண்டும். அதேவேளை, முடக்கும் காலத்தில் ஏழை மக்கள் பட்டினியால் பாதிக்கப்படாதவாறு உரிய நிவாரணங்களை வழங்கியாக வேண்டும். பொருட்களின் விலைவாசி ஏற்றங்களால் மக்கள் வாழ்வாதாரத்திற்காக போராடிக் களைத்து விட்டார்கள். இருந்தாலும் பொருட்கள் சேவைகளுக்கு அதிக வரிகளை அரசுக்குத் தினமும் செலுத்திக்கொண்டே இருக்கிறார்கள். ஏழைகள் கூட இதனைச் செய்கிறார்கள்.

எனவே, நாடு முடக்கப்படும் காலத்தில் மக்களுக்குப் போதிய நிவாரணம் வழங்கியாக வேண்டும். 2000 ரூபா நிவாரணம் மக்களுக்கு வழங்கப்படுவது போதவே போதாது. இந்தத் தொகை அதிகரித்த பொருட்களின் விலைவாசியோடு பார்க்கும்போது இரு நாட்களுக்கே போதுமானதல்ல.

எனவே, நிவாரணத் தொகை பத்தாயிரமாக அதிகரிக்கப்படவேண்டும். வைத்திய அதிகாரிகள் சங்கம், மக்களின் கருத்துகளுக்கு அரசு செவிசாய்க்காதுவிட்டால், அதற்கான பதிலடிகளையும் அரசு பெற்றுக்கொண்டேயாக வேண்டும். எத்தாக்கத்திற்கும் எதிர்த்தாக்கமுண்டு. இது விஞ்ஞானக் கருத்தாகும். அதேபோல் மெஞ்ஞானத்திலும் கருத்துண்டு. தினை விதைத்தால் தினையறுப்பாய், வினை விதைத்தால் வினையறுப்பாய் என்று.

அவ்வாறாயின், விஞ்ஞானமும் மெஞ்ஞானமும் நல்ல பாடம் தருகின்றன. அவற்றை அரசு மூளையில் பதிக்கவேண்டும். ஆகவே, அதிகார முடிவுகளை விட அறிவியல் முடிவுகளே கொவிட்டைக் கட்டுப்படுத்த உதவும். ஏற்கனவே இருந்த சுகாதார அமைச்சர் முட்டிகளைக் கங்கையில் உடைப்பதன் மூலம் கொவிட்டைக் கட்டுப்படுத்த முயற்சி செய்து தோற்றுப்போனார். அமைச்சர் பதவியும் மாற்றப்பட்டுவிட்டது.

கடந்த காலத்தில் எடுக்கப்பட்ட பல அதிகாரம் தோய்ந்த முடிவுகளால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியவில்லை. மேலும், கொவிட் கட்டுப்பாடு இராணுவமயமாவதை விட சுகாதாரத்துறையியல் மயமாக்கப்படவேண்டியதே விஞ்ஞான பூர்வமானதாகும்.

உலக செய்திகள்

உலகின் மிகப் பெரிய ராட்டினம் ஐக்கிய அரபு இராச்சியத்தில்

ஐக்கிய அரபு இராச்சியத்தின் புளுவோட்டர்ஸ் தீவில் நிர்மாணிக்கப்பட்டுவரும் உலகின் மிகப் பெரிய ராட்டினம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 21ஆம் திகதி திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புளுவோட்டர்ஸ் தீவில் 250 மீற்றர் உயரத்தில் நிர்மாணிக்கப்பட்டுவரும் பிரம்மாண்ட ராட்டினம், பிரித்தானியாவிலுள்ள 'லண்டன்-ஐ' ராட்டினத்தை விட 2 மடங்கு உயரமானதாகும்.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் 50ஆவது தேசிய தினத்தை முன்னிட்டு ராட்டினம் திறக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலிபான்கள் ஒத்துழைத்தால் மட்டுமே 31இற்குள் படைகள் வாபஸ் பெறப்படும் - அமெரிக்க ஜனாதிபதி

அமெரிக்காவுக்கான கெடு முடிய இன்னும் இருப்பது 4 நாட்களே!

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறுவது தலிபான்களின் ஒத்துழைப்பைப் பொறுத்தே முடிவுக்கு வரும் - என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அதிரடியாக தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் 20 ஆண்டுகளாக முகாமிட்டிருந்த அமெரிக்க, நேட்டோ படைகள் எதிர்வரும் 31ஆம் திகதிக்குள் திரும்ப பெறப்படும் என பைடன் அறிவித்துள்ளார். தற்போது, தலிபான்கள் அங்கு ஆட்சியை பிடித்துள்ளனர். அங்கிருந்து வெளியேறிவரும் மக்களை காபூல் சர்வதேச விமான நிலையத்திலிருந்து அமெரிக்க இராணுவ விமானங்கள் பாதுகாப்பாக மீட்டு வருகின்றன.

இதனிடையே, தலிபான்களின் செய்தித் தொடர்பாளர் ஜபைஹுல்லா முஜாகித், அமெரிக்கப் படைகள் கூறிய திகதியில் வெளியேறாவிடில் கடுமையான பின்விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று எச்சரித்தார்.

அமெரிக்கப் படைகள் முழுமையாக வெளியேறுவதற்கான கெடு முடிய இன்னும் 4 நாட்களே உள்ளன. இந்நிலையில், பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நேற்று முன்தினம் ஆலோசனை நடத்தினார்.

இதுகுறித்து ஜோ பைடன் தெரிவிக்கையில்,

அமெரிக்கப் படைகள் வெளியேறும் திட்டத்தை குறித்த காலத்துக்குள் செயற்படுத்துவதில் உறுதியாக இருக்கிறேன். இதில் எந்தளவுக்கு சிக்கல்களை சந்திக்கவேண்டியிருக்கும் என்பது குறித்து தெரியும். தலிபான்கள் உண்மையிலேயே கடும் சவாலாக இருப்பார்கள். எனவே, அவர்களின் ஒத்துழைப்பை பொறுத்தே அங்கிருந்து அமெரிக்கப் படையினர் ஓகஸ்ட் 31ஆம் திகதிக்குள் வெளியேறுவது பற்றி

முடிவெடுக்க முடியும்'' - என்றார்.

தீவிரவாத அச்சுறுத்தல்

காபூல் விமான நிலையத்தில் தீவிரவாத அச்சுறுத்தல் இருப்பதால், தங்கள் நாட்டவர்கள் அப்பகுதியிலிருந்து உடனே வெளியேற வேண்டும் என்று அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

ஓகஸ்ட் 15ஆம் திகதி காபூலை தலிபான்கள் கைப்பற்றிய பின்னர் ஆயிரக்கணக்கான மக்கள் தப்பிச் செல்லும் நோக்கில் காபூல் விமான நிலையத்தைச் சுற்றி குழுமியுள்ளனர். இதனிடையே எதிர்வரும் 31ஆம் திகதிக்குள் (செவ்வாய்க்கிழமைக்குள்) ஆப்கானிலிருந்து அனைத்து அமெரிக்கர்களையும் மீட்பதில் அந்நாட்டு ஜனாதிபதி ஜோ பைடன் தீவிரமாகவுள்ளார்.

ஐ.எஸ். தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் காரணமாக உரிய அறிவுறுத்தல் வரும்வரை, காபூல் விமான நிலையத்திற்கு பயணம் செய்யவேண்டாம் எனவும், விமான நிலையத்திற்கு வந்திருந்தால் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறும் அமெரிக்க வெளியுறவு அமைச்சு எச்சரித்துள்ளது.

சீனா - தலிபான் முதல் பேச்சு

தலிபான் அரசியல் பிரிவின் துணைத் தலைவர் அப்துல் சலாம் ஹனபி, ஆப்கானிஸ்தானுக்கான சீனத் தூதர் வாங் யீ இடையே காபூலில் முதல் கட்ட பேச்சுவார்த்தை நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இது குறித்து சீன வெளியுறவு அமைச்சு செய்தித் தொடர்பாளர் வாங் வென்பின் கூறுகையில்,

சீனா - ஆப்கானிஸ்தானின் தலிபான்கள் இடையே தடையற்ற, பயனுள்ள தொடர்பு மற்றும் ஆலோசனை நடந்தது. காபூல், சீனாவுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஆப்கானிஸ்தானை கட்டமைக்கவும், அங்கு அமைதி நிலவவும் சீனா ஒத்துழைப்பளிக்கும் - என்று தெரிவித்தார்.

முப்படைத் தலைமை தளபதி அதிர்ச்சி

இந்திய முப்படைகளின் தலைமை தளபதி பிபின் ராவத் கூறுகையில், ஆப்கானிஸ்தானை தலிபான்கள் குறுகிய காலத்தில் கைப்பற்றியது அதிர்ச்சியளிக்கிறது. தீவிரவாதத்துக்கு எதிரான போரில் குவாட் நாடுகள் ஒத்துழைப்பை அதிகரிக்கவேண்டும் - என்றார்.

சீனா - ரஷ்யா வலியுறுத்து

''தீவிரவாதத்துக்கு ஆதரவில்லாத, அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய அரசுதான் ஆப்கானில் அமையவேண்டும்'' - என சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் மற்றும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புட்டின் ஆகியோர் நடத்திய பேச்சுவார்த்தையின்போது வலியுறுத்தப்பட்டுள்ளது.

புட்டினுடன் தொலைபேசியில் உரையாடிய சீன ஜனாதிபதி, தீவிரவாத இயக்கங்களுடனான உறவை தலிபான் துண்டித்துக்கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளதுடன், ஓராயிரம் ஆப்கான் அகதிகளுக்கு இடமளிக்கத் தயார் என்று ரஷ்யா அறிவித்துள்ளது.

அமெ. மீட்பு விமானத்தில் பிறந்த குழந்தைக்கு 'ரீச்' என பெயர்

காபூலிலிருந்து பறந்த அமெரிக்க இராணுவ விமானத்தில் நிறைமாத கர்ப்பிணிக்கு பிறந்த ஆப்கான் குழந்தைக்கு அந்த விமானத்தின் குறியீட்டுப் பெயரான "ரீச்" என பெயரிடப்பட்டுள்ளது என அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காபூலிலிருந்து மீட்கப்பட்டு அந்த விமானத்தில் கொண்டு செல்லப்பட்ட கர்ப்பிணிப் பெண்ணுக்கு, விமானம் ஜேர்மனை அடைந்ததுடன், விமானத்தின் கார்கோ பகுதியில் வைத்து, இராணுவ மருத்துவர்களின் உதவியுடன் பிரசவம் பார்க்கப்பட்டது. அதன் பின்னர் தாயும் - சேயும் அருகிலுள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

தங்களை மீட்ட சி-17 விமானத்தின் குறியீட்டுப் பெயரான ரீச் என்பதை தங்களது குழந்தைக்கும் சூட்ட அதன் பெற்றோர்கள் முடிவு செய்தனர். பின்னர், குழந்தை ரீச்சும் பெற்றோரும் பாதுகாப்பாக அமெரிக்கா சென்றடைந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனியில் 'பீட்சா' விற்கும் ஆப்கான் முன்னாள் அமைச்சர்

ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறிய அந்நாட்டின் முன்னாள் அமைச்சர் சையத் அகமது சதத் ஜேர்மனியில் பீட்சா விநியோகம் செய்யும் படங்கள் வெளியாகியுள்ளன.

தலிபான்கள் ஆப்கானிஸ்தானைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து அந்நாட்டில் வசித்துவந்த உயர் அதிகாரிகள்முதல் மக்கள்வரை அங்கிருந்து வெளியேறி வருகின்றனர். தங்களது சொந்த நாட்டை விட்டு பிற நாடுகளுக்கு அகதிகளாக மக்கள் இடம்பெயர்ந்து வருவது சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், கடந்த 2020ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஜேர்மனியில் குடியேறிய ஆப்கானிஸ்தானின் முன்னாள் அமைச்சர் சையத் அகமது சதத் பிரபல தனியார் நிறுவனத்தின் பீட்சா விநியோகம் செய்யும் பணியைச் செய்யும் படங்கள் சமூக வலைத்தளத்தில் வெளியாகியுள்ளன.

சைக்கிளில் சென்று பீட்சா விநியோகிக்கும் அவர், வறுமை காரணமாக இந்த வேலையை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

உலகப் புகழ்பெற்ற ஒக்ஸ்போர்ட்

பல்கலைக்கழகத்தில் தொலைதொடர்பு மற்றும் மின்னணுவியலில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ள சதத் 20 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றவர்.

2005 முதல் 2013ஆம் ஆண்டுவரை ஆப்கான் அரசின் தகவல் தொலைத்தொடர்புத்துறை அமைச்சின் ஆலோசகராக இருந்த சதத், கடந்த 2018ஆம் ஆண்டு அமைச்சரவையில் இடம்பெற்றார். அதன்பிறகு ஆப்கான் ஜனாதிபதியாக இருந்த அஷ்ரப் கனியுடனான கருத்து வேறுபாடு காரணமாக தனது பதவியை 2020ஆம் ஆண்டு இராஜினாமா செய்தமை குறிப்பிடத்தக்கது.

நாகை - வேளாங்கண்ணி பேராலய திருவிழா: நாளைமறுதினம் கொடியேற்றத்துடன் ஆரம்பம்

ஒன்லைனில் தரிசனம் செய்ய ஏற்பாடு

கொரோனா பரவல் காரணமாக வழிபாட்டுத்தலங்களில் பக்தர்கள் தரிசனம் செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளதால் வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய மாதா பேராலயத்திற்கு பக்தர்கள் பாதை யாத்திரையாகவும், பஸ்கள் மற்றும் வாகனங்கள் மூலமாகவும் வருவதை தவிர்க்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொண்டுள்ளார்.

தமிழகத்தில் கொரோனா தொற்றுப் பரவல் காரணமாக அனைத்து மத வழிபாட்டுத்தலங்களிலும் எதிர்வரும் 31ஆம் திகதிவரை பொதுமக்கள் பிரார்த்தனை செய்ய மற்றும் மதம் சார்ந்த நிகழ்ச்சிகளுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

பிரசித்திபெற்ற வேளாங்கண்ணி பேராலயத்தின் ஆண்டு திருவிழா நாளைமறுதினம் 29ஆம் திகதி கொடியேற்றுத்துடன் தொடங்குகிறது. செப்டெம்பர் 8ஆம் திகதிவரை விழா நடைபெறும் நிலையில், கொரோனா பரவலை கவனத்திற்கொண்டு, பக்தர்களுக்கு தடைவிதித்து மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

வேளாங்கண்ணி திருவிழா

இந்த விழாவில் கலந்துகொள்ள இலட்சக்கணக்கானோர் பாதை யாத்திரையாகவும், வாகனங்கள் மூலமாகவும் வந்துசெல்வார்கள்.

வங்கக் கடலோரம் அமைந்துள்ள வேளாங்கண்ணியில் திருவிழா நடைபெறும் 11 நாட்களும் மனித கடலாக காட்சியளிக்கும். அந்தளவுக்கு இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் பக்தர்கள் அங்கு குவிவார்கள்.

பிரான்ஸின் லூர்து நகரிலுள்ள பேராலயத்தைபோன்று வடிவமைக்கப்பட்ட வேளாங்கண்ணி பேராலயத்துக்கு கிறிஸ்தவ பெருமக்கள் மட்டுமல்லாமல், இந்துக்கள், இஸ்லாமியர்கள் என பலதரப்பட்டோரும் அங்கு சென்று வருவது வழக்கம். இதனால் மத நல்லிணக்கத்தின் அடையாளச் சின்னமாக வேளாங்கண்ணி பேராலயம் திகழ்கிறது.

இயேசுபிரானின் தாயான மரியன்னை தங்களுக்காக அவர் மகனிடத்தில் பரிந்துரைத்து துயர் துடைப்பார் என்பது கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் நம்பிக்கை. தீராத நோய்களுடனும் துன்பங்களுடனும் அவதிப்படும் ஆயிரக்கணக்கானோர் வேளாங்கண்ணி பேராலயத்திற்கு வருகை தருவதாக வேண்டி தங்கள் நேர்த்திக்கடனை நிறைவேற்றுவார்கள். தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் பாதயாத்திரையாகவும் வேளாங்கண்ணிக்கு வருகை தருவார்கள்.

பக்தர்கள் வேண்டுதல்

திருவிழா நடைபெறும் 11 நாட்களும் தமிழ், ஆங்கிலம், மராத்தி, மலையாளம், கொங்கணி, தெலுங்கு, கன்னடம் ஆகிய பல மொழிகளில் திருப்பலிகள் நடைபெறும். இதேபோல் நோய்களில் அவதிப்படுபவர்கள் குணம்பெறவேண்டி சிறப்பு வேண்டுதல் நிகழ்வும் நடைபெறும். மக்கள் அன்னையிடம் கண்ணீர் மல்க பிரார்த்தனை செய்துகொள்வார்கள்.

மரியே வாழ்க என்ற விண்ணை பிளக்கும் பக்தர்களின் முழக்கங்களுடன் ஆண்டுதோறும் வெகுவிமரிசையாக நடைபெற்று வந்த வேளாங்கண்ணி திருவிழாவில் கொரோனா பரவல் காரணமாக கடந்த ஆண்டும் இந்த ஆண்டும் பக்தர்கள் பங்கேற்கவில்லை.

கொரோனா பரவல் காரணமாக வழிபாட்டுத்தலங்களில் பக்தர்கள் தரிசனம் செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளதால் வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய மாதா பேராலயத்திற்கு பக்தர்கள் பாதயாத்திரையாகவும், பஸ்கள் மற்றும் வாகனங்கள் மூலமாகவும் வருவதை தவிர்க்க வேண்டும் என நாகை மாவட்ட ஆட்சியர் அருண் தம்புராஜ் தெரிவித்துள்ளார்.

இதற்கு பதில் வேளாங்கண்ணி பேராலய ஆண்டு பெருவிழா ஆராதனை நிகழ்ச்சிகளை பக்தர்கள் தொலைக்காட்சி, செய்தித்தாள்கள் மற்றும் சமூக வலைத்தளங்கள் மூலமாக கண்டுகளிக்கலாம்.

10 நாட்களும் வேளாங்கண்ணியில் தங்கும் விடுதிகளை மூட உத்தரவிடப்பட்டுள்ளது. திருவிழாவை முன்னிட்டு தற்காலிக கடைகள் அமைப்பதற்கும், பிற கடைகள் மற்றும் உணவகங்களை திறப்பதற்கும் அனுமதியில்லை என அருண் தம்புராஜ் அறிவித்துள்ளார்.

விளையாட்டின் உணர்வுகளை மனதில் பதித்த சுகுமார்



ரமணி

வாழ்வியலின் மறக்க முடியாத நினைவுகளில் முதன்மையானவற்றில் புகைப்படமும் ஒன்று. புகைப்படப்பிடிப்பும் கலைகளில் ஒன்றுதான். ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான புகைப்படங்களை விரும்புவார்கள். ஆனால், பாடசாலை மாணவர்கள் தமக்குப் பிடித்தமான சினிமா நடிகர், நடிகை, விளையாட்டு வீரர் போன்றோரின் படங்களை சேகரிப்பார்கள். பத்திரிகைகளில் பிரசுரமாகும் தமக்குப் பிடித்தமானவர்களின் படங்களைப் பாதுகாப்பார்கள்.

நாமும் பல படங்களைப் பார்த்து வியந்திருப்போம். அந்தப் படத்தை எடுத்தது யார் என்பது தெரியாது. நாம் பார்த்து ரசித்த பல படங்களின் சொந்தக்காரர் சென்னையைச் சேர்ந்த சுகுமார் என்பது நமக்குத் தெரியாது. சச்சின் டெண்டுகல்கரின் சுயசரிதையான “பிளேயிங் இஸ் மை வே“ எனும் புத்தகத்தின் அட்டைப்படத்தை அலங்கரிப்பது சுகுமாரின் புகைப்படம்.

புகைப்படக் கலைஞரான சுகுமார் கேஷாத்திரி தனது 35 வருடகால அனுபவத்தில் நான்கு ஒலிம்பிக், இரண்டு உலகக் கிண்ண உதைபந்தாட்டம், இரண்டு ஆசிய விளையாட்டுகள், டென்னிஸ் போட்டிகள், உலகக்கிண்ண ஒருநாள் கிரிக்கெட், இருபதுக்கு 20 உலகக்கிண்ணம், ஐ.பி.எல் போன்ற விளையாட்டு நிகழ்வுகளை புகைப்படம் எடுக்க உலகம் முழுவதும் பயணம் செய்துள்ளார்.

வெற்றிபெற்றவரின் முகத்தில் ஏற்படும் பூரிப்பும், தோல்வியடைந்தவரின் முகத்தில் உண்டாகும் ஏமாற்றமும் சுகுமாரின் கெமரா வழியே நம் மனதில் பதிந்துள்ளன.

தஞ்சாவூரில் பிறந்த சுகுமார், சிறு வயதிலேயே பெற்றோருடன் சென்னையில் குடியேறினார். டோக்கியோ ஒலிம்பிக் போட்டியை புகைப்படம் எடுக்க இந்தியாவிலிருந்து அனுமதிக்கப்பட்ட மூன்று புகைப்படப்பிடிப்பாளர்களில் சுகுமாரும் ஒருவர்.

தனது டோக்கியோ அனுபவம் பற்றி அவர் கருத்துத் தெரிவிக்கையில், ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடந்த ஒலிம்பிக் அனுபவம் வித்தியாசமானது. அரங்குகொள்ளாத பார்வையாளர்களின் கரகோஷத்துடன் நடைபெறும் போட்டிகளையே பார்த்து படமெடுத்து பழகிய நான் முதல் முறையாக பார்வையாளர்கள் இல்லாமல் படமெடுத்தேன்.

விளையாட்டு வீரர்களின் அக்ஷன் படங்களுடன் அவர்களது முகபாவங்களை படமெடுப்பதென்பதும் எனக்கு மிகவும் பிடித்த விடயம். குத்துச்சண்டை போட்டியில் முன்பெல்லாம் வெற்றி பெற்றவர்களின் கைகளை பிடித்து நடுவர் தூக்கி காண்பித்து வெற்றி பெற்றதை அறிவிப்பார். கொரோனா காரணமாக இப்போது நடுவர்கள் யார் கையையும் தொடுவதில்லை, கட்டைவிரலை மட்டும் காண்பிப்பார்.

ஆனால், அது தெரியாமல் இந்திய வீராங்கனை மேரிகோம் தான் வெற்றி பெற்றதாக சந்தோஷத்தில் குதித்து பின் தோல்வி என்பதை அறிந்து துவண்டு போனார். பளு தூக்கும் வீராங்கனை மீராபாய் குறிப்பிட்ட பளுவை தூக்கியதுமே தனக்கு பதக்கம் உறுதி என்பதை உணர்ந்து கம்பீரமாக பளுவை தூக்கி போடுவார்.

சிந்து வெற்றிபெற்ற அடுத்தகணமே புகைப்படக்கலைஞர்களை பார்த்து தனது சந்தோஷத்தை பதிவுசெய்வார். இப்படி நமது வீரர்களை வித்தியாசமாக படமெடுத்தேன். வில்வித்தை வீராங்கனை தீபிகாவிடமிருந்து அம்பு பறப்பதை ஒரு செலஞ்சாக எடுத்து பதிவு செய்தேன். நீரஜ் சோப்ரா முதல் வாய்ப்பில் ஈட்டி எறிதலைப் பார்த்ததுமே அவருக்கு பதக்கம் உறுதி என்பதை தெரிந்துகொண்டு நிறைய படங்கள் எடுத்தேன். அவரும் தங்கம் வென்று நாட்டை பெருமைப்படுத்தினார்.

அவர் தங்கியிருந்த இடத்திற்கு மறுநாள் சென்று அவர் சம்பந்தப்பட்ட படங்களை காண்பித்தபோது அவருக்கு அவ்வளவு சந்தோஷம். என்னிடமிருந்த கெமராவை வாங்கி அவரும் சில கோணங்கள் பார்த்து மகிழ்ந்தார். நீரஜ்சோப்ரா சம்பந்தப்பட்ட எனது படங்கள் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு இதுவரை 15 இலட்சம் பேர் பார்த்துள்ளனர்.

இந்த எண்ணிக்கை இன்னும் கூடும். கிரிக்கெட் வீரர் கோஹ்லி பகிர்ந்து கொண்ட படத்தை ஐந்து இலட்சம் பேர் பார்த்ததுதான் இதுவரை சாதனையாக இருந்தது. ஆனால், இப்போது மூன்று மடங்கு அதிகமாகியுள்ளது. பல்லாயிரக்கணக்கான படங்கள் எடுத்திருந்தாலும் அதில் தேர்ந்தெடுத்த படங்களைத்தான் இங்குள்ள ஏஜன்சி பயன்படுத்திக்கொண்டது. மக்கள் பார்க்காத, பார்க்கவேண்டிய படங்கள் நிறைய இருக்கின்றன. அவற்றை ஒழுங்குபடுத்திக்கொண்டு இருக்கிறேன். இந்த வேலை முடிந்ததும் நல்ல அனுசரணையாளர் கிடைத்தால் கண்காட்சி நடத்தவும் திட்டமிட்டுள்ளேன்.

பி.காம் பட்டதாரியான சுகுமாருக்கு இப்போது 66 வயது. வங்கியில் காசாளராக கடமையாற்றிய சுகுமார் தட்டச்சு, புத்தக பராமரிப்பு, புகைப்படம் எடுத்தல் போன்ற பல புதிய திறன்களைக் கற்றுக்கொண்டார். சுகுமாரின் புகைப்படக் கலையைப் பார்த்து வியந்த வங்கி, 1979ஆம் ஆண்டு அவரை அதிகாரபூர்வ புகைப்படக் கலைஞராக ஆக்கியது. 1984 இல் அவர் ஒரு ப்ரீலான்ஸ் விளையாட்டு புகைப்படக் கலைஞராக பணியாற்றத் தொடங்கினார். 2001இல் ஓய்வுபெற்ற பிறகு, அவர் சர்வதேச பணிகளில் அதிக ஈடுபாடு காட்டினார்.

2016ஆம் ஆண்டு ரியோ ஒலிம்பிக்கின் போது ஜப்பானிய ப்ரீஸ்டைல் மல்யுத்த வீராங்கனையான சவோரி யோஷிடாவை அமெரிக்காவின் ஹெலன் மரோலிஸ் தோற்கடித்து வரலாறு படைத்தார். இது அமெரிக்காவுக்கு ஒரு வரலாற்றுத் தருணம். ஆனால், ஜப்பானுக்கு குறிப்பாக, யோஷிடாவுக்கு ஒரு மிகப்பெரிய இழப்பு. 13 முறை உலக சம்பியன். 4 ஏசியன் கேம்ஸ், 4 ஏசியன் சம்பியன் ஆகியவற்றில் தங்கம் வென்றவர். 2 ஒலிம்பிக் தங்கங்களும், ஒரு ஒலிம்பிக் வெள்ளியும் வென்றவர் யோஷிடா.

சுகுமாரின் புகைப்படம் அவள் முகத்தில் இழப்பின் மூல உணர்ச்சியைப் பதிவு செய்தது. இந்தப் புகைப்படம் பின்னர் அவருக்கு அமெரிக்காவின் போட்டோ கிராபிக் சொசைட்டியின் தங்கப் பதக்கத்தை வென்று கொடுத்தது. விளையாட்டு மீதான அவரது ஆர்வம் அவரை எல்லா எல்லைகளையும் தாண்டி சிறப்பாகச் செய்யத் தூண்டியது. உசைன் போல்ட்டின் ஒற்றை காட்சியைப் பிடிக்க 4 மணி நேரத்திற்கும் மேலாக ஒரே நிலையில் காத்திருந்து, மிகப்பெரிய தேசிய, சர்வதேச விளையாட்டு பிரபலங்களைக் கிளிக் செய்வது வரை, அவர் அனைத்தையும் செய்துள்ளார். ஒத்திசைக்கப்பட்ட நீச்சல் விளையாட்டாக ஒரு புகைப்படப் புத்தகத்தை வெளியிட சுகுமார் விரும்புகிறார்.

அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரிலிருந்து விலகும் செரீனா

டென்னிஸ் உலகில் கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து கொண்ட தொடர்களில் ஒன்றான இந்தாண்டின் இறுதி கிராண்ட்ஸ்லாம் தொடரான அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடர் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில், பிரபல டென்னிஸ் வீராங்கனையான அமெரிக்காவை சேர்ந்த செரீனா வில்லியம்ஸ் விலகுவதாக அறிவித்துள்ளார். தொடை தசைநார் கிழிவிலிருந்து முழுமையாக குணமடைவதற்காகவே இவ்வாறு அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரிலிருந்து விலக முடிவு செய்ததாக செரீனா கூறியுள்ளார்.

உலகின் முன்னணி டென்னிஸ் வீராங்கனையான 39 வயதுடைய செரீனா வில்லியம்ஸ் இதுவரை 23 முறை கிராண்ட்ஸ்லாம் சம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்துள்ளார். இந்நிலையில், இந்த ஆண்டு சொந்த மண்ணில் நடைபெறவுள்ள கிராண்ட்ஸ்லாம் போட்டியில் அவரால் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் ரசிகர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

இதுதொடர்பாக அவர் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் இவ்வாறு பதிவிட்டுள்ளார். “உடல்நிலையை கவனமாக பரிசீலித்து, எனது மருத்துவர்கள் மற்றும் மருத்துவக் குழுவினரின் ஆலோசனையின்பேரில், தொடை தசைநார் கிழிவிலிருந்து முழுமையாக குணமடைவதற்காக அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரிலிருந்து விலக முடிவு செய்தேன்’’ - என செரீனா வில்லியம்ஸ் பதிவிட்டுள்ளார்.

78 ஓட்டங்களுக்குள் சுருண்ட இந்திய அணி

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

இங்கிலாந்து அணியுடனான மூன்றாவது டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து அணியின் வேகப்பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல்போன இந்திய அணி 78 ஓட்டங்களுக்குள் சுருண்டுபோனது.

விராட் கோஹ்லி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணியானது ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது.

முதலிரண்டு போட்டிகள் நிறைவில் இந்திய அணி 1-0 என்ற அடிப்படையில் முன்னிலை வகிக்கும் நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் லீட்ஸில் ஆரம்பமானது.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கியது. இந்திய அணிக்கு ஆரம்பமே மிக மோசமாக அமைந்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான கே.எல்.ராகுல் ஓட்டம் எதுவும் பெறாமல் வந்த வேகத்திலேயே முதல் ஓவரில் ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழக்க 40.4 ஓவர்கள் நிறைவில் இந்திய அணி 78 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான ரோஹிட் சர்மா 19 ஓட்டங்களையும், அஜிங்கிய ரஹானே 18 ஓட்டங்களையும் அதிகபட்ச ஓட்டங்களாக பெற்றுக்கொண்டனர். ஏனைய வீரர்கள் அனைவரும் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தமை குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்து அணியின் பந்துவீச்சில் ஜேம்ஸ் அண்டர்சன் 6 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், கிரேக் ஓவர்டேன் 14 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், ஒல்லி ரோபின்சன் மற்றும் சாம் கரன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகள் வீதம் வீழ்த்தினர். பதிலுக்கு முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் இங்கிலாந்து அணி முதல்நாள் ஆட்டநேர முடிவின்போது விக்கெட் இழப்பின்றி 120 ஓட்டங்களை பெற்றது.

ஹார்டிக் பாண்ட்யாவின் கைக்கடிகாரத்திற்கு 5 கோடி

இந்திய கிரிக்கெட் வீரர் ஹார்டிக் பாண்ட்யா இன்ஸ்டாகிராமில் தான் வாங்கியிருக்கும் புத்தம் புதிய கைக்கடிகாரத்தின் புகைப் படத்தை அண்மையில் பகிர்ந் திருந்தார். அதன் விலை 5 கோடி இந்திய ரூபாவாகும்.

இந்திய இளம் கிரிக்கெட் வீரரான ஹார்டிக் பாண்ட்யா கிரிக் கெட்டை போலவே மிகவும் ரசித்து வாழ்க்கையை வாழக்கூடியவர். விலை உயர்ந்த வீடு, ஆடம்பர கார்கள், விலை மதிப்பான பொருட்கள் என வாங்கும் அனைத்துமே விலை உயர்ந்ததாகவே இருக்கிறது.

தன்னுடைய சகோதரரும், இந்திய வீரருமான க்ருணால் பாண்ட்யாவுடன் சேர்ந்து மும்பையிலுள்ள ருஸ்ரம்ஜி பாராமவுண்ட் சொசைட்டி அடுக்குமாடி குடியிருப்பில் 8 படுக்கை அறைகளுடன் 3838 சதுர அடி கொண்ட 30 கோடி ரூபா விலை கொண்ட ஆடம்பர வீட்டை வாங்கியிருந்தார். இதே வளாகத்தில்தான் பொலிவூட் நட்சத் திரங்களான டைகர் ஷ்ராப், திஷா பட்டானி ஆகியோரின் வீடுகளும் அமைந்திருக்கின்றன.

கார் பிரியரான ஹார்டிக் பாண்ட்யா லம்போர்கினி ஹூராகேன், ஆடி ஏ6, மெர்சிடஸ் ஏ.எம்.ஜி கி 63 போன்ற ஆடம்பர கார்களை வீட்டில் நிறுத்திவைத்திருக்கிறார். சாதாரண மணி பார்க்கும் கடிகாரத்தைக்கூட மலைக்க வைக்கும் விலையில் வாங்கி வாயடைக்க வைத்திருக்கிறார் ஹார்டிக் பாண்ட்யா.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7